No:55:11 Price: Rs.10.00

# Herald of Deliverance
# விடுதலைத் தூதன்

"Speak evil of no man" - Titus3:2 " Follow peace with all men"-Hebrews12:14

NOVEMBER 2011

## உன்னைச்
## சுத்தவானாகக் காத்துக்கொள்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# ஆசிரியர் உரை...

அன்பான தூதன் வாசகர்களுக்கு,

எனது இதயங்கனிந்த அன்பின் வாழ்த்துதல்கள்.

நாம் கடந்த மாதம் நமது உள்ளாட்சித் தேர்தலுக்காக ஜெபித்து வந்தோம். கர்த்தர் தமது சித்தத்தின்படி தமக்கு ஏற்றவர்களைத் தேர்ந்தெடுத்து, நமக்கு நல்லாட்சியை அமைத்துத் தந்ததற்காக, தேவனை ஸ்தோத்திரிப்போமாக.

சென்னை மாநகரத்தில் வாழும் மக்கள் எவ்விதக் குறைவுமின்றி மகிழ்ச்சியோடு வாழும்படி, தொடர்ந்து ஜெபிக்கவேண்டியது நமது கடமையாகும்.

நம்முடைய சபைகளில் விசுவாசிகள் பலரும் ஆராதனைக்கு உரிய நேரத்தில் வராமல், தாமதித்து வருகின்றனர். இது கர்த்தருக்குப் பிரியமானதல்ல. சபைகூடுதலில் பலரும் செய்திக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கின்றனரே தவிர, கர்த்தரை ஆராதிப்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

இப்பூவுலகில் கர்த்தரை ஆராதிக்காதவர்கள் பரலோகில் சென்று, "**பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்**" என்று சதாகாலமும் துதித்துக்கொண்டிருக்கும் தூதர்களோடும் பரிசுத்தவான்களோடும் சேர்ந்து, எப்படித் தேவனை ஆராதிக்கமுடியும்? "**இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்**" (சங்கீதம் 22:3) என்று வேதம் கூறுகிறது. ஆம், தேவாலயத்தில் நமது துதிகளின் மத்தியில் தேவன் வாசஞ்செய்து மகிழ்கிறவர்.

விசுவாசிகள், பெரிய தொகையைத் தேவனுக்குக் காணிக்கையாகச் செலுத்த முடியாவிடினும், துதித்தலாகிய தங்கள் காணிக்கையைச் செலுத்த, ஆராதனைக்கு உரிய நேரத்தில் வரவேண்டும். ஏனெனில், தேவன் தம் மக்களின் துதிகளில் பிரியப்படுகிறார். நாம் தேவனை ஆவியோடும், கருத்தோடும் ஆராதித்து மகிழவேண்டும்.

தேவபிள்ளைகள் சபையில் பயபக்திக்குரிய முறையில் அமர்ந்து, தேவனை ஆராதிக்க முற்படவேண்டும். "**பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்**" என்று வேதம் கூறுகின்றது (சங்கீதம் 96:9).

இக்காலத்தில் தேவனுடைய பிள்ளைகளின் சிந்தை, பார்வை ஆகிய இவற்றை பிசாசு தேவ ஆலயத்தினின்று திசைதிருப்ப முயலுகிறான். தேவ பிள்ளைகளுடைய ஆசீர்வாதங்களின் அரிய பொக்கிஷசாலையாகிய வேத வசனங்களை மனதிற்கொள்ள விடாது தடுக்கவும் முற்படுகின்றான்.

"**சரீரத்தின்படி நான் தூரமாயிருந்தும், ஆவியின்படி உங்களுடனேகூட இருந்து உங்கள் ஒழுங்கையும், கிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தின் உறுதியையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன்**" (கொலோசெயர் 2:5) என்று பவுல் எழுதியுள்ளார்.

ஆம், தேவன் ஒழுங்கில் பிரியப்படுகிறவர். தேவசபையில் தேவனுடைய பிள்ளைகள் ஒழுங்கைக் கடைப்பிடிப்பது அவசியம். நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்துடனே அதில் பெருகுவீர்களாக (கொலோ. 2:6,7).

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

அன்புள்ள

# உன்னைச்
## சுத்தவானாகக் காத்துக்கொள்

போதகர் எம்.கே.சாம் சுந்தரம்

"Cleanliness is next to godliness" ஆங்கிலத்திலோர் பழமொழியுண்டு. புறம்பாகச் சுத்தவானாக வாழவேண்டும் ...ணுகிறவன் நிச்சயமாகவே தேவ ...டுத்தவன். பழமொழிகளெல்லாம் ...ன அனுபவங்களின் அடிப்படையில் உண்டாயின. புறம்பான சுத்தம் உள்ளத் ... சுத்தமாக வைக்கத் தூண்டும் என்பது ...கயில் உண்மையே.

சுத்தவான்களாக நாம் நம்மைக் காத்து ...வேண்டுமென்றே வேதாகமம் எச்சரிக் ...து. பவுல் அப்போஸ்தலன், ஊழியனான ...தேயுவுக்கு அறிவுறுத்துகின்றதைக் கீழே ...போம்.

"உன்னைச் சுத்தவானாகக் காத்துக் ... (1 தீமோத்தேயு 5:22).

தீமோத்தேயு ஒரு சபையின் போதகன். ...னுக்கு ஊழியஞ்செய்யும்படியாய்த் ...ன அர்ப்பணித்தவன். தேவனுக்குப் ...மாய், தன்னைச் சுத்தவானாகக் காத்து ...வாஞ்சித்தவன். அவனிடம்தான் பவுல், "...னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்" ...ர்.

அன்பு சகோதரரே! ஓர் ஊழியனுக்கும் ...சிக்கும் பரிசுத்த வாழ்க்கை மிகமிக ...யமே. அதில் விலக்கொன்றுமில்லை. ...ன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை ...தே; மற்றவர்கள் செய்யும் பாவங் ...கும் உடன்படாதே" (1 தீமோத்தேயு ...) என்றும் அதே வசனத்தில் கூறியுள்ளார் ... ஆம், நீங்கள் பாவஞ்செய்யாமல் ...ம். எனினும், பாவத்திலே உழன்று ...ருக்கும் மற்றவர்களோடு இணைந்தும், இசைந்தும் அமைதியாக அமர்ந்திருந்தால்கூட நீங்கள் பாவஞ்செய்தவர்களாகவே கருதப் படுவீர்கள்.

"உன் நண்பன் யாரென்று சொல், நீ யாரென்று நான் உனக்குச் சொல்லுவேன்" என்று, ஆங்கிலத்திலோர் பழமொழியுண்டு. ஆகவே, மற்றவர்களோடு இணைந்து வாழ்வதில் எச்சரிப்படைவீர்களாக.

பரிசுத்த வாழ்வு என்பது ஒரே நாளில் பெற்றுக்கொள்ளும் ஓர் அனுபவமல்ல. அது ஒரு தொடர்ந்தேச்சையான செயல். ஒரு அறையைச் சுத்தமாகப் பராமரிக்க, ஒருநாள் மட்டும் செயல்பட்டால் போதாது. அனுதினமும் அதனைத் தொடர்ந்து பராமரிப்பது அவசியம். அதுபோன்றே, பரிசுத்த வாழ்வையும் தொடர்ந்து செயல்படுத்துவது மிக மிக அவசியம்.

பரிசுத்த வாழ்வைக் கைக்கொள்ள நாம் மூன்று காரியங்களைக் கடைப்பிடித்தொழுகுவது அவசியம். அவை: சுத்தமான இருதயம், சுத்தமான பக்தி, சுத்தமான மனச்சாட்சி என்பன வாகும்.இச்செய்தியைத் தமிழ் வேதாகம மொழி பெயர்ப்பின் அடிப்படையில் காண்போம்.

### சுத்தமான இருதயம்

*"கற்பனையின் பொருள் என்னவெனில், **சுத்தமான இருதயத்திலும்** நல்மனச்சாட்சி யிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே"* (1 தீமோத்தேயு 1:5).

"சுத்தமான இருதயத்தில் ... பிறக்கும் அன்பு" என்று இங்குப் பவுல் குறிப்பிடுவது காண்க. தீமோத்தேயு சபைப் போதகனாய் வாழ்ந்த காலத்தில் மாயமான துர்உபதேசங்கள் அவ்வூரிலே பிரபலமாகி வந்ததால், தெய்வ

பக்தியிலிருந்தும் தேவ அன்பிலிருந்தும் அவன் வழுவிவிடாதபடி, பவுல் அவனை எச்சரித்துள்ளார்.

*"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக ... உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக ... இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை"* (மாற்கு 12:30,31). ஆம், வேதத்தின் எல்லாக் கட்டளைகளையும் இவை இரண்டிற்குள் அடக்கிவிடலாம்.

1 தீமோத்தேயு 1:5 இல், *"சுத்தமான இருதயத்தில் பிறக்கும் அன்பு"* என்று குறிப்பிட்டிருப்பதால், நாம் தேவனில் சுத்தமான இருதயத்தோடு அன்புகூரவேண்டும் என்பதாம். தேவன் தாவீதைத் தம் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டாலும், அவன் பாவத்தில் விழுந்தபோது, *"தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்"* என்று கதறினான். தேவனைத் தரிசிப்பதற்குரிய ஒரே நிபந்தனை சுத்தமான இருதயம் உடையவராயிருத்தல் ஆகும் (மத்தேயு 5:8).

தேவனைச் சுத்த இருதயத்தோடு தரிசிப்பதற்கு, பெந்தெகொஸ்தே சபையில் அங்கம் வகித்தால்மட்டும் போதாது. சபை ஊழியர்கள் விசுவாசிகளைச் சுத்தமாக்க முடியாது. பரிசுத்த ஆவியானவரால்மட்டுமே பரிசுத்த வாழ்க்கையைத் தம் மக்களுக்கு அளிக்கமுடியும்.

சுத்தமான இருதயத்தை விசுவாசிகள் பெற்றுக்கொள்ள அவர்களுக்கு மூன்று முக்கியப் பண்புகள் தேவை. அவை: சுத்தமான பேச்சு, சுத்தமான சிந்தை, சுத்தமான இருதயத்தாரோடுள்ள ஐக்கியமாகும்.

ஒரு விசுவாசி வாய்திறந்து பேசுவதற்கு முன் எந்தெந்த சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதைச் சிந்தித்து, பின்னரே பேச முற்படவேண்டும். சிலரது வாயிலிருந்து கெட்ட வார்த்தைகளும், பிறரைக் குறைகூ... வார்த்தைகளும் புறப்படுகின்றன. அது த...

*"சுத்த இருதயத்தை விரும்புகி...னுடைய உதடுகள் இனிமையானவைகள்; ... அவனுக்குச் சிநேகிதனாவான்"* (நீதிமொழி... 22:11) என்று வேதம் கூறுகிறது.

*"... உங்கள் வசனம் எப்பொழு... கிருபை பொருந்தினதாயும் உப்பால் ... மேறினதாயுமிருப்பதாக"* என்று கொலோசெ... 4:6 இல் காண்கிறோம்.

ஆம், ஆராதனையில் அமர்ந்திருக்... போதுமட்டுமல்லாது, எப்போதும், எவ்விடத்... கணக்கிட்டுப் பேசும் சொற்கள் உங்... வாயினின்று பிறக்கட்டும். கெட்ட வார்த்தை... பிறரைக் கிண்டல் செய்யும் வார்த்தைகள் ... இருதயத்தைக் கறைப்படுத்தும். தே... பிரசன்னத்தை எப்போதும் உணர்ந்தவர்க... வாழ, பரிசுத்த ஆவியானவரிடம் கிரு... கேளுங்கள்.

அடுத்து, சுத்த இருதயம் உங்களி... உருவாக, உங்களுக்குள் சுத்தமான சிந்... நினைவு இருத்தல் அவசியம். கர்த்தர் நோ... காலத்தில் உலகை அழிக்கச் சித்தமானபோ... "அவன் (மனிதன்) இருதயத்து நினைவுக... தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாத... (ஆதியாகமம் 6:5) என்று கண்டார்.

இயேசுகிறிஸ்துவும் இருதயத்... தீட்டுப்படுத்தும் பாவங்களைக்குறித்துக் கூறி... போது முதலாவது, *"...இருதயத்திலிரு... பொல்லாத சிந்தனைகளும் ..."* (மத்தே... 15:19) என்று பட்டியலிட்டுத்தான் கூறியுள்ளா...

சுத்த இருதயத்தைக் கெடுக்க மனித... மிருந்து திடீரென பொல்லாத செயல்... வெளிப்படுவதில்லை. எந்த மனித... திடீரென்று பாவத்தில் விழுவதுமில்ல... முந்தினநாள் பரிசுத்தத்தின் உச்சக்கட்ட... லிருப்பவன், அடுத்தநாள் பாவத்துக்குள் ... மாட்டான். முதற்கண், அவனுக்குள் பொல்... சிந்தனைகள், நினைவுகள் உண்டாகி, ...

வுற்ற பின்னர்தான், அவன் பாவத்தில் வான்.

இந்தப் பொல்லாத சிந்தனைகுறித்து, வாசியோடு நெருங்கி வாழ்பவனோ, ம்ப அங்கத்தினரோ அறியமுடியாது. ல்லாத சிந்தனைகள், கண்களின் சைகள், மாமிசத்தின் இச்சைகள் உள்ளத்தில் விக் கிரியை செய்யும்போது, விசுவாசிகள் ரிபபடைவார்களாக. சுத்தவான்களாகத் களைக் காத்துக்கொள்ள விசுவாசிகள் ப்புடன் வாழ்வார்களாக.

"அன்றியும், பாலியத்துக்குரிய இச்சை க்கு நீ விலகியோடி, **சுத்த இருதயத் டே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிற** ளுடனே, நீதியையும் விசுவாசத்தையும் பையும் சமாதானத்தையும் அடையும்படி " (2 தீமோத்தேயு 2:22).

மூன்றாவதாக, சுத்த இருதயம் நமக்கு டுமானால், சுத்த இருதயத்தோடே வனைத் தொழுதுகொள்ளுகிறவர்களோடு நமக்கு ஐக்கியம் தேவை. ஊழியக் னான தீமோத்தேயுவே பாலியத்துக்குரிய சைகளுக்குத் தப்பியோடவேண்டுமென்று கூறுவாரானால், விசுவாசிகளாகிய நாம் ணை அதிகமாய்ச் செயல்படவேண்டும்! தேவபிள்ளைகளுக்கு அளிக்கப்படும் ஓர் ரிப்பாகும்.

அன்பானவர்களே! உங்களுடைய கியம் யாரோடுள்ளது? சுத்த இருதயத் டே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களோ ளதா? ஆராயவும். சுத்த இருதயம் ளவர்களோடே நெருங்கிப் பழகுங்கள். களிடம் அன்புகூருங்கள்.

"...ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப் ந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் ண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த யத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் புகூருங்கள்" (1 பேதுரு 1:22);

சுத்த இருதயமுள்ளவர்களோடு நாம் ஐக்கியங்கொண்டு அவர்களிடம் அன்புகூர வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசக்கூடாது. உள்ளே பகை, வெறுப்பு, வெளியிலோ முத்தங்கள்! இது சுத்த இருதயத்தோடே காட்டும் அன்பல்ல. இது இரட்டைவேடம்போடும் அன்பு. சுத்த இருதய முடையவர்களோடு அன்புகூர்ந்து, ஐக்கியம் பாராட்டுவோம்.

சுத்தமான பேச்சு, சுத்தமான சிந்தனை, சுத்தமான இருதயங்கொண்டுள்ளோரோடு ஐக்கியம், இவை சுத்தமான இருதயத்தின் அடித்தளங்களாகும்.

## சுத்தமான பக்தி

"திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக் கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத **சுத்தமான பக்தியாயிருக்கிறது**" (யாக்கோபு 1:27).

தமிழ் மொழிபெயர்ப்பின் அடிப்படையில் தான் செய்தியினைக் கண்டுவருகிறோம் என்பதை நினைவிற்கொள்ளுவோம்.

ஆங்கில வேதாகமத்திலே, "சுத்தமான பக்தி" என்பது, "சுத்தமான மதம்" என்று கூறப்பட்டுள்ளது. 'மதம்' அல்ல 'பக்தி' என்பது தான் சரியான மொழிபெயர்ப்பாகும். 'பக்தி' என்பது ஆலயத்தின் ஆராதனைகளில் பங்கேற்பது, தரையில் விழுந்துகிடந்து தேவனைத் தொழுதுகொள்ளுவது அல்ல. பரிசுத்த வேதாகமம் சுத்தமான பக்திக்குரிய இரு அம்சங்களைச் சுட்டிக்காட்டுகின்றது. அவை: இரக்க குணம், பாவம் நிறைந்த உலகினின்று பிரிந்து வாழுதல் என்பனவாகும்.

திக்கற்ற பிள்ளைகளையும் விதவை களையும் அவர்களது உபத்திரவத்தின் நேரத்திலே விசாரிக்கும் பண்பே சுத்தமான பக்தியைக் குறிப்பதாகும்.

அன்பானவர்களே! உங்களது சபையில் காணும் அனாதைப் பிள்ளைகளுக்கும், விசாரிப்பாரற்ற விதவைகளுக்கும் உங்களாலான பொருளுதவி செய்யப் பிரயாசப்படுங்கள். அனாதைப் பிள்ளைகளுக்கு உணவு, கல்விக்கான செலவு, மற்றும் அவர்களது அவசரத் தேவைகள் இவற்றைச் சந்தித்து உதவுங்கள். உங்களிடம் பொருள் வசதியின்றிக் காணப்படுவீர்களானால், அவர்களை விசாரித்து ஜெபித்து, ஆதரவளியுங்கள். இதுவே, சுத்தமான பக்திக்குரிய அடையாளமென்று வேதாகமம் கூறுகின்றது.

தேவன், பஞ்சகாலத்தில் எலியாவைப் போஷிக்க, சாறிபாத் விதவையிடம்தான் அவனை அனுப்பினார். “என்னை ஒரு விதவை போஷிக்கமுடியுமா?” என்று தேவனிடம் கேள்வி கேளாது, அவ்விதமே கீழ்ப்படிந்து அவ்விதவையிடம் சென்றான் எலியா. அப்பஞ்சகாலத்தில் அவளையும், அவளது மகனையும் போஷிக்க எலியா ஓர் அற்புத வழியை அவளுக்குப் போதித்தான். என்ன வழி அது?

“நீ போய் அடையை ஆயத்தஞ்செய்து முதலாவது என்னிடம் வந்து கொடு. பிறகு, மற்றவைகளை ஆயத்தப்படுத்தலாம்” என்று அவ்விதவையிடம் கூறினான். இதன் மறைமுகமான போதனை என்ன? *“முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்”* (மத்தேயு 6:33) என்பதாகும். இதனை அவ்விதவைக்குத் தெளிவுபடுத்தினான் எலியா.

திக்கற்ற பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும், “முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தைத் தேடுங்கள்” என்பதைக் கற்றுக்கொடுங்கள். இதுவே, அவர்களது பிரச்சனைகளுக்குரிய தீர்வாகும்.

சுத்தமான பக்தியுடன் வாழ, உங்களைச் சுற்றியுள்ள அசுத்த உலகத்திலிருந்து வி... கறைதிரையற்று வாழ்வதும் அவசியம... உங்களைச் சுற்றியுள்ள இக்காலத்து உ... உங்களைத் தன்பக்கம் இழுக்க, நவநாக... களை வெளியிட்டுவருகின்றது. உ... கவர்ச்சி உங்களைப் பாவஞ்செய்யத் தூண்...

“நாளைய நாகரீகம் இன்றே இ... கிடைக்கிறது” என்ற விளம்பரப் பலகைக... கடைகளில் இந்நாட்களில் பொருத்தி... கின்றனர். இவ்விளம்பரத்தைக் கா... இளைஞரும் ஏன், முதியோருங்கூட இத... கறைப்படுகின்றனர். நவநாகரீகங்க... பட்டியலை வேதாகமத்தில் காணமுடிய... ஆகவே, இவைகுறித்து அநேகர் வாத... துண்டு.

“உதடுகளின் சாயம், நகங்களின் சா... எனக்கு அவசியமா?” என்று நீங்க... உங்களுள்ளத்தில் கேள்வி எழுப்பி, தேவ... மிருந்து அதற்குரிய பதிலைப்பெற்... கொள்ளுங்கள். வேற்றுப் பாலா... கவர்ச்சிக்கும் பொருட்களைத் தவிர்ப்ப... உங்களது சுத்தமான பக்தியாகும். உங்... சரீரங்களைத் தேவனுக்கேற்கும் ஜீவபலி... ஒப்புக்கொடுங்கள். அனுதினமும் மறு... மாகுங்கள். சுத்தமான பக்தியுடன் வாழுங்...

## சுத்தமான மனச்சாட்சி

*“... என் முன்னோர்கள் முதற்கொ... சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்து... தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறே...* (2 தீமோத்தேயு 1:4).

சுத்தவானாக ஒரு விசுவாசி தன்... காத்துக்கொள்ளவேண்டுமானால், அவ... காணவேண்டிய மூன்றாவது பண்பு **சுத்த... மனச்சாட்சியாகும்.** முன்னோர்கள் சுத்த... சாட்சியோடு தேவனை ஆராதித்துவந்த... ஆராதனை என்பது வெறும் பாடல்க... பாடுவதுமட்டுமல்ல. நமது கிறிஸ்... வாழ்க்கையே அவருக்கு ஆராதனைய... காணப்படவேண்டும். எபிரெய நண்பர்க...

யேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ
வர்கள் தேவனை இடைவிடாமல்
தித்துவந்தவர்கள்.

பாபிலோன் தேசத்தில் பிரதம
ரிக்கு ஒப்பான நிலையில் வாழ்ந்தும்,
யேல் தன் தேவனை இடைவிடாமல்
தித்துவந்தவன் என்று இராஜாவாலும்,
க்களாலும், மற்றமக்களாலும் நற்சாட்சி
பெற்றிருந்தான். அவனுக்குள் சுத்த
சாட்சி இருந்தது.

சுத்தமான மனச்சாட்சியோடு வாழ,
முள்ள மனச்சாட்சியை அகற்றவேண்டும்.
மற்ற மனச்சாட்சியோடு வாழக் கற்றுக்
ளவேண்டும். ஒரு விசுவாசி தவறு செய்யும்
ஆண்டவர் அவனது இருதயத்தில்
வார். இதை உணர்ந்து கொள்ள,
மையான மனச்சாட்சி தேவை. அவர்
வதை அல்லத்தட்டுபவர்களின் மனச்சாட்சி
கிப்போய்விடும். அவர்கள் குற்றவுணர்வு
காணப்படுவர். அவர்கள் தேவனைச்
மனச்சாட்சியோடு ஆராதிக்க முடியாது.

பரிசேயரும் சதுசேயரும் விபசாரத்தில்
ம மெய்யுமாய்ப் பிடிபட்ட பெண்
ருத்தியைக் கண்டு, நியாயப்பிரமாணத்
டி அவள் கல்லெறிந்து கொல்லப்பட
டுமெனக் கோரி, சரியான தீர்ப்பளிக்க
சுவுக்கு முன்பாக அவளைக் கொண்டு
நிறுத்தினர். அதற்கு அவர், "உங்களில்
மில்லாதவன் இவள்மேல் முதலாவது
லறியக்கடவன்" என்று கூறினார்.

அவர்கள் தங்கள் மனச்சாட்சியினால்
கொள்ளப்பட்டு, பெரியோர்முதல்
சிறியோர்வரை அவளைத் தனியே விடுத்துச்
சென்றனர் (யோவான் 8:7-10).

ஏன் அவர்கள் அவளை விடுத்துச்
சென்றனர்? அவர்களது மனச்சாட்சி அவர்களைக்
குற்றப்படுத்தியது. அன்பானவர்களே!
உங்களுள்ளத்தைக் குற்றவுணர்வினால்
வதைத்துக்கொண்டிருக்கும் மனச்சாட்சியை
அகற்றுவீர்களானால், சுத்தமனச்சாட்சியோடு
வாழமுடியும்.

*"இதனால் நான் தேவனுக்கும்
மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும்* ***குற்ற
மற்ற மனச்சாட்சியை*** *உடையவனாயிருக்கப்
பிரயாசப்படுகிறேன்"* (அப்போஸ்தலர் 24:16)
என்று பவுல் கூறுவது காண்க.

அடுத்து, சுத்த மனச்சாட்சியோடு வாழ,
நமக்குத் தேவையானது குற்றமற்ற மனச்சாட்சி
யாகும். பவுல் அப்போஸ்தலன் இவ்விதக்
குற்றமற்ற மனச்சாட்சியைப் பெற்று வாழப்
பிரயாசப்பட்டார். அதனால், *"என் சரீரத்தை
ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்"* (1 கொரிந்தியர்
9:27) என்றார்.

ஆம், குற்றமற்ற மனச்சாட்சி வேண்டு
மானால், நாம் நமது சரீரத்தின் இச்சைகளை
நிறைவேற்றாது, கட்டுப்பாட்டுடனும், ஒழுக்கத்
துடனும் வாழ, நம்மை அப்பியாசப்படுத்திக்
கொள்ளவேண்டும். அப்போது சுத்தமனச்
சாட்சியைப் பெற்றுக்கொள்ளுவோம்.

சுத்த இருதயத்தோடும், சுத்தமான
பக்தியோடும், சுத்த மனச்சாட்சியோடும்
வாழ்ந்து, நம்மைச் சுத்தவான்களாகக் காத்துக்
கொள்ளுவோம். தேவன்தாமே நமக்குத் தமது
மிகுந்த கிருபைகளைத் தந்தருளுவாராக.



# PAUL –
## THE SAINT

**Pastor M.K. Sam Sundaram**

(Please read Philemon vv.8-21)

This is a very short letter written by Apostle Paul, and it is one of the letters written by him in prison. It is written to Philemon, and it is an appeal for reconciliation with Onesimus his slave.

Paul seems to address Philemon personally for the reason mentioned above. The letter mentions three major Bible characters, namely, Paul, Philemon and Onesimus. The rest of the names mentioned by Paul are not significant.

Apostle Paul is indeed an example to us and, as I carefully studied the letter, I could draw a few lessons from it. I could also see Paul as a great saint.

In verses 9 and 19 we see Paul personally addressing Philemon by referring to himself as "I Paul the aged" and "I Paul". The word 'aged' denotes the rich spiritual experience he has gained over the years and this has made him a saint.

The greatness of Paul lies in his pleading the cause of Onesimus, a runaway slave, who is legally owned by Philemon. Onesimus is the spiritual child of Paul. Paul writes a well organized and emotionally appealing letter using the utmost tact (as the task on hand is a very delicate one) so as not to hurt the feelings of Philemon who is also the spiritual child of Paul.

**Paul's request to Philemon**

*"Yet for love's sake I rather bes thee, being such an one as Paul the a and now also a prisoner of Jesus Chr*

*I beseech thee for my son Onesim whom I have begotten in my bonds"* ( & 10):

The intent and purpose of his le is to bring about a reconciliation betw Philemon the master and Onesimus the sl Paul is following one of the beatitudes m tioned by Jesus in Matthew 5:9—*"Ble are the peacemakers: for they shall called the children of God."*

There are believers who do not c for a peaceful relationship with other beli ers. Jesus Christ Himself instituted f washing and Holy Communion. If the c science of believers is blunt, neither f washing nor Holy Communion will help bringing about peace. No reconciliation tween believers is possible unless the H Spirit works in their hearts by breaking, m ing and moulding them.

For the last few days I have b weeping in my spirit and praying for p among the believers of our church. Only Holy Spirit should work in every believ heart and create a genuine desire to h peace with one another.

In his attempt to bring about peace between Philemon and Onesimus Paul reminds Philemon about God's work, God's witness and God's wisdom.

**God's work in Onesimus**

*"I beseeth thee for my son Onesimus, whom I have begotten in my bonds:*

*Which in time past was to thee unprofitable, but now profitable to thee and to me"* (vv.10 & 11):

Onesimus is a man brought to Christ by Paul. Paul has had a great burden for souls and, obviously, Onesimus is one of the souls brought to the saving knowledge of Jesus by Paul.

The two words 'in time past' and 'now' in verse 11 speak of God's work in the life of Onesimus. While running away from his master Onesimus has, perhaps, stolen some of the goods of Philemon, and therefore Paul tells Philemon that in time past Onesimus (meaning 'profitable') may have been unprofitable to him, but now he is profitable to both Paul and Philemon.

Paul being a saint understands God's work in transforming people extremely well. A robber does not continue to be a robber nor does a chain smoker or an adulterer or a drug addict or even a murderer remain in his sin for ever. God in His infinite mercy and compassion changes every repentant sinner. In fact, Paul's conversion itself speaks volumes about God's merciful work.

Every true testimony should have two parts—the past and the present. In Onesimus' past Christ had no place. He was not useful to anyone. He ran away from his master who had bought him paying a price. But now, Paul says, he is a child of God, a believer transformed by the blood of Jesus (through the efforts of Paul), and, therefore, is profitable to both of them. Because Paul recognized the work of God in the life of Onesimus, he took upon himself the task of making peace.

**God's witness about Onesimus**

*"Whom I have sent again: thou therefore receive him, that is, mine own bowels"* (v.12):

Paul says that sending Onesimus back to Philemon is like sending his very heart. Onesimus who is the spiritual child of Paul is so beloved to him that sending him away is like sending his own heart. Paul has become very attached to Onesimus, and what he speaks as a saint is the witness of the Spirit of God.

When Jesus changes a man, he who was useless before becomes useful. That is what Paul says about Onesimus. He was unprofitable before, but now he is profitable (useful) to both of them.

*"For perhaps he therefore departed for a season, that thou shoudest receive him for ever;*

*Not now as a servant, but above a servant, a brother beloved, specially to me, but how much more unto thee, both in the flesh, and in the Lord"* (vv.15 & 16)?

Paul's saintly character is revealed in his attitude to Onesimus a slave. He does not consider him a slave (servant) but loves him as a Christian brother. Onesimus is dear to

Paul but he thinks he will be dearer to Philemon in the flesh as a servant, and spiritually, as one who is now in the Lord, and therefore, a fellow believer.

Paul writes to the Colossians, *"But as touching brotherly love ye need not that I write unto you: for ye yourselves are taught of God to love one another"* (I Thess. 4:9).

Since we are enjoined by God Himself to love one another, we should consider others as our brothers and sisters and love them in spite of their faults. Onesimus has committed a crime in running away from his master with stolen goods; yet, Paul the saint loves him as his own heart since he has come into God's marvellous light.

Dear children of God, change your attitude to those you think deserve to go to hell. God can change anyone who is destined to go to the gallows. His power to convict and convert criminals is immeasurable.

**God's wisdom in Paul**

*"Whom I would have retained with me, that in thy stead he might have ministered unto me in the bonds of the gospel:*

*But without thy mind would I do nothing; that thy benefit should not be as it were of necessity, but willingly"* (vv.13 & 14).

Although Paul would have liked to keep Onesimus with him so that he could minister to his needs during his imprisonment, he respects Philemon's wish, and therefore, he does not want to do anything without consulting him. It should not appear as though he is compelling Philemon to Onesimus back. He would like him to voluntarily. Filled with God's wisdom writes to Philemon that he cares for his ings and that he will not do anything w will hurt them.

While attempting to bring Phile and Onesimus together, Paul is filled Christ's compassion. If believers are invo in the work of reconciliation, they shou filled with the compassion and wisdo Christ without which they cannot be succ ful.

**Paul's reminder**

*"I Paul have written it with m own hand, I will repay it: albeit I do say to thee how thou owest unto me e thine own self besides"* (v.19).

Paul reminds Philemon that he is debted to him in many things, particularly conversion. He writes to Philemon Onesimus was brought to Christ by (Paul), so also he (Philemon) was brou to the Lord by him. Therefore, he writes *I do not say to thee how thou owest u me even thine own self..."*

In verse 18 Paul tells Philemon if Onesimus has done anything wrong in way or owes anything to him, Philemon by all means, put it to his (Paul's) acco In the next verse he promises to repay in whatever Onesimus owes Philemon.

Paul's reminder to Philemon ab his salvation through Paul should make feel grateful to him. Gratitude and gene ity are the two traits that should be foun every saved person.

...itude

Although you are saved by grace by ... washed by the sinless blood of Jesus, ... some human agent that you are brought ... saving knowledge of Jesus Christ. In ... life itself, though he was directly ... by Jesus on the road to Damascus, ... Ananias who was instrumental in Paul's ... salvation, baptism and the anointing ... Holy Spirit. The sinner Saul became ... after conversion. Paul could never for... Ananias, and whenever he remembered ... he felt grateful to him.

Dear believer, do you remember who ... you to Christ? First of all be grate... Jesus Christ for the blood He shed on ... cross of Calvary to save you. Next, re... with gratitude the one who was in...mental in your accepting Jesus as your ...our. Just as you were brought to salva... someone, you should also bring souls ... Jesus Christ.

...erosity

Once you get saved by the grace of ... your attitude to the unsaved will become ...rous. That is to say, when you realize ... sinful state before salvation, you will ...generous (kind) in the way you treat them. ... will never look down on them, but in... lead them to salvation just as you were ...ed to get saved by a kind hearted person.

It is God who works in the life of a ... He forgives his sins and changes him ...pletely. If God forgets his sins, why do ... talk about them? When you do, you are ...ling your carnal nature. Paul does not speak about the past of either Philemon or Onesimus because of his generosity and also because he is a follower of Christ in every respect.

Dear child of God, never indulge in slandering others by talking about their sinful life before salvation. Our God is so merciful that He not only forgives our sins but forgets them, too. Therefore, be generous in your attitude to unsaved people. Have a burden for them and bring them to the Lord.

**Paul's rest**

*"Yea, brother, let me have joy of thee in the Lord: refresh my bowels in the Lord"* (v.20).

The phrase 'refresh me' which Paul uses here means that he wants Philemon to refresh his heart in Christ so that he, an old man in prison awaiting death any moment, can be at rest if Philemon will accept Onesimus as a Christian brother.

Paul appreciates Philemon for giving him much joy and encouragement by his love. He also says that through him the hearts of the saints who are his fellow Christians are cheered and refreshed (v.7).

Now Paul appeals to him for such a joy as will cheer his heart one more time. It will give peace and rest to his soul.

When believers establish a close rapport with fellow Christians, there will be an atmosphere of peace and joy. God is speaking to every believer through this message. He expects you to be like Paul, saintly in your attitude, words and actions so that you can be an example to other Christians.

ஊழியர் பகுதி

## விசுவாச அப்போஸ்தலன்

# ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

அது ஒரு ஏழைக்குடும்பம். தன்னுடைய மனைவி, ஒரு மகள் மற்றும் மூன்று குமாரர்கள் கொண்ட குடும்பத்தை வாழவைக்க நீண்ட நேரம் உழைத்து வந்த சாதாரணத் தொழிலாளி அந்தத் தந்தை. எனவே, தனது ஆறுவயதிலேயே, வயலிலே வேலை செய்வதற்கு ஆரம்பித்துவிட்டான் சிறுவன் விக்கிள்ஸ்வொர்த். விடியற்காலை முதல் இரவு வரை வயலிலே டர்னிப் கிழங்கு பிடுங்கும் வேலை. அந்தப் பிஞ்சுக் கரங்கள் பிய்ந்து, புண்ணாகி, வீங்கி விடும். ஆனாலும், இந்தக் கடின வேலை, அவனது தந்தையைப் போலவே கடினமாகவும், நெடுநேரமும் பொறுமையாய் உழைக்கும் நற்பண்பை அவனுக்குள் விதைத்தது. இதுவே, பின்னாட்களில் தேவன் தமது உழியத்தை அவரிடம் ஒப்படைத்தபோது, அதைச் சீரும் சிறப்புமாகச் செய்யவைத்தது. யார்க்ஷயர் கிழங்குத் தோட்டத்திலிருந்து, உலகளாவிய ஊழியத்திற்கு அவர் உயர்த்தப்பட்ட காலத்திலே, தேவன் ஊழியத்தைத் தனது கரத்தில் ஒப்புவிக்க, தான் பொறுப்பானவராகக் கருதப்படுவதை உணர்ந்த, நம்பத்தகுந்த கடின உழைப்பாளியாக மாற்றியது.

அடுத்த ஆண்டே, அதாவது தனது ஏழாம் வயதிலே, சிறுவன் விக்கிள்ஸ்வொர்த் தனது தந்தையார் வேலை செய்துவந்த கம்பளி நூற்பாலையிலே வேலைக்குச் சேர்ந்தான். மிகக்கடினமானவேலை இது. அதுவும் தொழிலாளர் நலச் சட்டங்கள் ஏதும் இல்லாத காலமது. பொழுது விடிந்தது முதல் இரவின் தொடக்கம் வரை வேலை செய்தாக வேண்டும். குழந்தைத்தனமாகத் தந்தையிடம் கேட்பான், "இன்னும் எவ்வளவு நேரம், அப்பா?" தந்தையும் தேற்றுவார், "வேலை செய்பவர்களுக்குக் கட்டாயம் இரவு வந்தே தீரும், மகனே!"

இத்தனை கடினமான வேலை குழந்தைப் பருவத்தில் ஈடுபட்டுவிட்டா ஒரு குழந்தையின் மென்மையான குண இழந்துவிடவில்லை இந்தச் சிறுபிள் திறந்த வெளியிலே மலர்ந்து நிற்கும் டெ மலர்கள் இக்குழந்தையின் கண்களை ஈர்க் தன் தேவனின் சிருஷ்டிப்பின் அழகை அவ ஆவி நுகரும். அப்போதெல்லாம், விடி காலைப் பனித்துளி சுமந்து நிற்கும் அ புத்தம் புது இதழ்களைக் குனிந்து முத்தமிட் செல்வது அவன் வழக்கம். அழ நுண்மையை, நொய்மையை, மென்மை முத்தமிட்டானா அல்லது அந்த அழ சிருஷ்டித்த தன் தேவனின் கரத்தை மு மிட்டானா அந்தச் சிறு பிள்ளை?

தந்தையும், தனயனும் சம்பாதித்த குடும்பக் கஷ்டம் குறைந்தது. அனைவருக் போதுமான உணவு கிடைத்தது.

பெற்றோர்கள் ஒழுங்காகச் சபைக் செல்லும் கிறிஸ்தவர்கள்தான். ஆயி இரட்சிப்பின் நேரடி அனுபவம் கிடைய அவர்களுக்கு. ஆனாலும் தேவனுக்காக ஏங் நேரமில்லை இந்தச் சிறுவன். எப்படி ஜெபி வேண்டும் என்றுகூடக் கற்றுத்தரவில்ல அந்தப் பெற்றோர். ஆனாலும் தன்னு குழந்தைத்தனமான வழியிலே தேவ நோக்கிக் கேட்கத் தெரிந்துகொண்டிருந் சிறுவன். பறவைக் கூட்டைத் தேடும் இ தேவனை நோக்கிக் கேட்பான்; உடனே எ தேடுவதெனக் கண்டுகொள்வான். இப் கழிந்தது அந்தச் சிறுபிள்ளையின் வாழ்க் இன்னும் ஓராண்டுதான் கழிந்திருக் விக்கிள்ஸ்வொர்த்திற்கு வயது எட்டு. அ எட்டாம் வயதிலே இரட்சிப்பின் நிச்சய கிடைத்துவிட்டது அந்தச் சிறுவனுக்கு.

தன் எட்டுவயதிலேயே தேவனைக் ...த்த தாகம் கொண்ட அச்சிறுவனுக்கு, ...து பாட்டியார் உருவிலே இரட்சிப்பின் வழி ...டைத்தது. பழங்கால வெஸ்லியன் ...டிஸ்ட் சபையைச் சேர்ந்த ஓர் பக்தை, தான் ...லும் ஆராதனைகளுக்கெல்லாம் ...கிள்ஸ்வொர்த்தையும் கூட்டிச் செல்ல ...ம்பித்தார்.

இப்படிப்பட்ட ஓர் மாலை ஆராதனை ...ங்கத்தை மிகவும் உன்னிப்பாகக் ...னித்தான் சிறுவன். அடுத்து மெய்மறந்து ...டலகள் பாடுவதிலும் இணைந்து ...ண்டான். குளிருக்காக நடுவிலே கரி ...டுப்பு ஒன்று போடப்பட்டிருந்தது. ...லியன் சபையினர் ஆராதனை முறைப்படி, ...த சகோதரர்களும் சகோதரிகளும் பாடின ...பாடல், தேவ ஆட்டுக்குட்டியையும், ...வையில் சிந்திய இரத்தத்தையும் பற்றியது. ...னும் அவர்களுடன் சேர்ந்து ஆடினான், ...னான். அவன் வாழ்க்கையே ஓர் மாற்றம் ...டது. "திடீரென, இயேசு எனக்காக மரித்தார் ...று உணர்ந்தேன். அவர் என்னுடைய ...ங்களையெல்லாம் சுமந்து தீர்த்தார் என்ற ...ணாவு சட்டென எனக்குள் வந்தது. என் ...யத்தை அவரிடம் தந்தேன்; இதோ, நான் ...படி பிறந்துவிட்டேன்." இதுதான் அவரே ...வாய்மொழியாக அந்த நாளில் தமக்கு ...ன நேர்ந்தது என்பதுபற்றி பின்னாட்களில் ...றியது.

தொடர்ந்து அளவில்லா ஆனந்தக் ...ப்புடன் பாடினான், ஆடினான் சிறுவன் ...கிள்ஸ்வொர்த். மனமாறுதலின் இரகசியத்தை ...ன்றே கண்டுகொண்டான். அது அத்தனை ...யது. "விசுவாசமுள்ளவனாயிரு."

தனக்கு வெளிப்பாடாய்க் கிடைத்த ...த எளிய சூத்திரத்தையே அவர் தமது ...நாள் முழுவதும் கடைப்பிடித்தார். தனது ...திகளிலும், தனது சாட்சிகளிலும் இதையே ...டும்,மீண்டும் வலியுறுத்திக் கூறிவந்தார்.

இந்த வெளிப்பாட்டை அவர் பின்னாட்களில் இவ்வாறு எழுதி வைத்துள்ளார்: "தேவன் நம்மை அவ்வளவு அதிகமாய் விரும்புகிறார். அதனால்தான் அவரை நாம் நெருங்குவதற்கான நிபந்தனையை அத்தனை எளியதாய் வைத்திருக்கிறார். "விசுவாசமுள்ளவனாயிரு."

## எட்டுவயது ஆத்தும ஆதாயப் பணியாளன்

இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றவுடனேயே, இந்தச் சின்ன விக்கிள்ஸ்வொர்த் ஒரு ஆத்தும ஆதாயப் பணியாளனாக மாறிவிட்டான். அவனது முதல் அறுவடையே அவனது சொந்தத் தாயார்தான். தனது குடும்பம் மெய்யான இரட்சிப்பை அடைந்திருக்கிறது என்று கண்டுகொண்ட அவனது தந்தையார், தனது குடும்பத்தை எபிஸ்கோபல் சபைக்கு அழைத்துச் செல்ல ஆரம்பித்தார். ஆனாலும் அவர் இன்னும் இரட்சிப்பின் அனுபவத்துக்குள் வரவில்லை.

அந்தப் புதியசபையில், பாடகர் குழுவில் சேர்த்துக்கொள்ளப்பட்டான் சின்ன விக்கிள்ஸ்வொர்த்; தனது பத்தாம் வயதிலே, பரிசுத்த நற்கருணையில் பங்குபெறத் தகுதியாக்கும் 'திடப்படுத்தல்' பெற்றுக் கொண்டான். திடப்படுத்தல் ஆராதனையின் போது பிஷப் அவர்கள் தனது கரத்தை இவன் மீது வைத்தபோது, தேவனது பிரசன்னம் இவனை வல்லமையாக நிரப்பிற்று; பல நாட்கள் அவன் மேல் தங்கியிருந்தது. ஆனால் இவனோடு சேர்ந்து திடப்படுத்தல் பெற்ற மற்றச் சிறுவர்களுக்கு அவ்விதமான எந்த மாற்றமும் ஏற்படவில்லை. அவர்கள் எப்போதும் போலவே சண்டையிட்டுக்கொண்டு, கூச்சலிடும் சிறுவர்களாகவே இருந்தனர். தனக்கு மாத்திரம் ஏன் இந்த வித்தியாசம் என்று வியப்படைந்தான் சின்ன விக்கிள்ஸ்வொர்த்.

## புதிய இடம் - புதிய தொழில்

சின்ன விக்கிள்ஸ்வொர்த்துக்குப் பதிமூன்று வயதானபோது, குடும்பமே பிராட்ஃபோர்டு நகருக்குக் குடிபெயர்ந்தது.

இங்கு அவன் வெஸ்லியன் மெதடிஸ்ட் சபையில் தீவிரமாகப் பங்குபெறலானான். அவனது ஆவிக்குரிய வாழ்க்கை ஒரு புதிய வேகம் கண்டது; தேவனுடைய ஆவிக்காக ஏங்க ஆரம்பித்தான். ஏழ்மையின் காரணமாக பள்ளி செல்ல முடியாத இந்தப் "பள்ளிப் படிப்பறியா பாலகனுக்கு", சரிவரப்படிக்கத் தெரியாது. ஆயினும் வெட்கப்படாமல், தான் எங்குச் சென்றாலும், ஒரு புதிய ஏற்பாட்டைத் தன் பாக்கெட்டில் எடுத்துச் செல்வான்.

இந்த நாட்களில், அந்த சபையினர் ஓர் விசேஷித்த தொடர் சுவிசேஷக் கூட்டங்களை ஒழுங்கு செய்தனர். அதில் செய்தி அளிக்க சின்ன விக்கிள்ஸ்வொர்த் உட்பட ஏழு சிறுவர்களைத் தெரிந்துகொண்டனர். கூட்டங்களுக்கு மூன்று வாரத்துக்கு முன்பதாகவே சிறுவன் விக்கிள்ஸ்வொர்த் அதற்கு ஆயத்தமாக ஆரம்பித்துவிட்டான். மூன்று வாரங்களும் அவன் 'ஜெபத்திலேயே வாழ்ந்தான்.' அவன் பிரசங்கபீடம் ஏறும் நாளும் வந்தது. அவன் மேடையேறிய முதல் முறையும் அதுவே. ஏறக்குறைய கால் மணிநேரம் பேசிவிட்டான் விக்கிள்ஸ்வொர்த். ஆனால், இறங்கி வந்ததும் தான் என்ன பேசினோம் என்பதே நினைவில் இல்லை அவனுக்கு. அவன் நினைவுக்கு வந்ததெல்லாம் அந்தக் கட்டுக்கடங்காத ஆர்வமும், மக்கள் தன்னை உற்சாகப்படுத்திக் கொடுத்த குரல்களும் மட்டுமே.

இது முதற்கொண்டு விக்கிள்ஸ்வொர்த், தான் சந்திக்கும் எந்த மனிதரிடமும் சுவிசேஷத்தைச் சாட்சியாக அறிவிக்க ஆரம்பித்தான். ஆனாலும், அவர்களில் பலபேர் ஏன் ஆர்வமற்றவர்களாகவே இருக்கிறார்கள் என்பது அவனுக்குப் புரியவில்லை. காலங்கள் இவ்வாறே கடந்தன. அவனது பதினாறாம் வயதில், அதாவது 1875 ஆம் ஆண்டு, இரட்சண்ய சேனை பிராட்ஃபோர்டு நகருக்கு வந்தது. இந்தச் செய்தியைக் கேட்டுச் சிறுவன் பூரித்துப் போனான். அவனைப்போலவே, இழந்துபோன ஆத்துமாக்களைத் தேடும் குழுவினருடன் தான் பணிபுரிய முடியுமே என அகமகிழ்ந்தான்.

எனவே, அவர்கள் அங்கு வந்த[...] அவர்களுடன் போய்ச் சேர்ந்துகொண்[...] இங்குதான் அவன் உபவாசித்து ஜெபிப்[...] வல்லமையைக் கற்றுக்கொண்டான்.

அந்தக் காலக்கட்டத்தில், மற்ற [...] சபையினரையும் விட இரட்சண்ய சேனை[...] அதிக ஆத்துமாக்களை ஆதாயம் பண்[...] வந்தது. அவர்கள் அடிக்கடி முழு-இ[...] ஜெபக்கூட்டங்கள் நடத்துவார்கள்; அத்[...] தேவனுக்கு முன்பாக சாஷ்டாங்கம[...] தரையில் விழுந்து கிடப்பார்கள். அந்த ஆ[...] கால இரட்சண்ய சேனையினர் பெருத்த அ[...] ஆவிக்குரிய அதிகாரம் பெற்றிருந்தார்[...] அவர்களுடைய ஒவ்வொரு வாராந்தரக் கூ[...] திலும் ஐம்பது முதல் நூறு ஆத்துமாக்கள் [...] இரட்சிப்பைக் கண்டடைவது சகஜம்.

அடுத்த ஆண்டு விக்கிள்ஸ்வொர்[...] வாழ்க்கையிலே ஓர் திருப்புமுனை. அ[...] வேலை செய்து வந்த தொழிற்சாலையி[...] பக்தியுள்ள ஓர் மனுஷன் இருந்தார். அ[...] இந்தப் பதினேழு வயது இளைஞ[...] தண்ணீர்க்குழாய்கள் பதித்து, செப்பனி[...] தொழிலைக் கற்றுக்கொடுத்தார். இந்தக் கா[...] கட்டத்தில், கிறிஸ்துவின் இரண்[...] வருகையைக்குறித்த போதனையை அ[...] நன்றாய் அறிந்துகொண்டார். அ[...] நூற்றாண்டின் முடிவிலேயே கிறிஸ்து வ[...] விடுவார் என உறுதியாய் நம்பினார். என[...] தான் சந்தித்த ஒவ்வொரு நபரையுமே, அ[...] ஆயத்தமாக்கிவிட வேண்டுமெனத் துடித்[...]

தேவன் தன் வாழ்க்கையின் ச[...] காரியங்களையும் பார்த்துக்கொள்வார் எ[...] நம்பிக்கையுடன், விக்கிள்ஸ்வொர்த் ஊழ[...] செய்ய ஆரம்பித்தார். தன்னுடைய பதினொ[...] வயதிலே, அதாவது 1877 ஆம் ஆண்டு, அ[...] குழாய் பதிக்கும் தொழில் செய்து[...] ஒருவரிடம் சென்று வேலை கேட்[...] இப்போது தனக்கு ஒருவரும் தேவையில்[...] என்று மறுத்துவிட்டார் அவர்.

(தொட[...]

வேதபாடம்

# உன்னதப்பாட்டு

பாடம் 25 (தொடர்ச்சி)
(உன்னதப்பாட்டு 8:10, 11)

"நான் மதில்தான், என் ஸ்தனங்கள் கோபுரங்கள்; அவருடைய கண்களில் கடாட்சம் பெறலானேன்" (உன்.8:10).

இப்புத்தகத்தில் யார், யாரோடு பேசிக் கொண்டனர் என்பதை விளங்கிக்கொள்வது நமக்குக் கடினமே. எல்லா வசனமும், மணவாட்டியால் பேசப்பட்டவை அல்ல. மணவாளனும் மணவாட்டியும் இணைந்து உரையாடினதை அங்குக் கேட்டுக்கொண்டிருந்த, வளர்ச்சி பெறாத சிறிய சகோதரியின் சொற்கள் இவை.

அவள், "நான் மதில்தான்" என்றாள். இப்போது, சந்தேகத்துக்கிடமின்றி ஆவிக்குரிய நிலைமையிலே தான் வளர்ந்திருப்பதாகக் கூறினாள். மட்டுமன்றி, விசுவாசம், அன்பு ஆகியவற்றில் தான் தேர்ச்சியடைந்திருப்ப தாகவும் விளக்கினாள்.

"இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரிய மானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" (2 கொரி.7:1).

அன்பானவர்களே! ஆவியில் வளர்ச்சி குன்றியவர்கள் மனச்சோர்வு கொள்ளக்கூடாது. பரிசுத்தமாகுதலைத் தேவ பயத்தோடே பூரணப்படுத்திக்கொள்ள அழைக்கப்பட்டிருப்பதை மனவுகூரவேண்டும்.

நம்முடைய தேவன் நல்லவரும், பெரியவரும், கிருபை மிகுந்தவரும், இரக்க முடையவருமாவார். நம்முடைய வளர்ச்சியற்ற நிலையில், அவர் நம்மைக் கைவிடுபவரல்ல. அவர் நம்மீது கரிசனையுடையவராதலால், "நான் மதில்தான்", "நான் பிரித்தெடுக்கப் பட்டவள்தான்" என்று கூறுமளவிற்கு நம்மைப் பரிசுத்தப்படுத்துவார். அவருக்குள் பூரணராகும் படி நம்மை வழிநடத்துவார். விசுவாசிப்போமாக.

"... கோபுரங்கள்; அவருடைய கண்களில் கடாட்சம் பெறலானேன்" (வசனம் 10).

ஒரு கோபுரம் எவ்வாறு மற்றவர்களால் எளிதில் கண்டறியுமாப் போல் காணப்படுமோ, அதுபோன்று தனது வாழ்க்கை சாட்சியாகவும், எல்லோரும் வெளியரங்கமாக அறியுமாறும் அமைந்துள்ளது என்றாள் அந்தச் சிறிய சகோதரி. சுயதிருப்தியினாலல்லாது, "நேசரின் கண்களில் கடாட்சம் பெற்றுவிட்டேன்" என்ற மகிழ்ச்சியோடு கூறினாள். இதனைப் பெருமை யோடன்றி, தாழ்மையோடும் எளிமையோடும் எடுத்துரைத்தாள். அதனால்தான், நேசரது கண்களில் கடாட்சம் பெற்றாள் அவள்.

பிரியமானவர்களே! ஆவியின் வளர்ச்சியில் குன்றியவர்கள், புதிதாக இரட்சிப்புக்குள் வருகிறவர்கள், தேவனுடைய கண்களில் தயவுபெற்று உயர்ந்து வளரும் போது தங்களைத் தாழ்த்தியும், உற்சாகத் தோடும் சாட்சிபகருவது இயல்பு என்பதை, "நான் மதில்தான்... கடாட்சம் பெறலானேன்" என்றுள்ள சிறிய சகோதரியின் வாக்கு, நமக்குப் போதிக்கின்றது.

அன்பானவர்களே, **இயேசுவின் மேலுள்ள அன்பை எந்தச் சூழ்நிலைகளும் தணியச் செய்யக்கூடாது. ஆவியின் வளர்ச்சி குன்றியவர்களுக்காக, வளர்ந்த விசுவாசிகள் பாரங்கொள்ளவேண்டும்.**

**ஆவிக்குரிய வாழ்வில் பின்தங்கிய நிலையிலிருப்பவர்கள், உலகின் அசுத்தங்களுக்கு விலகி, உலகைவிட்டுப் பிரிந்து வாழும்போது, நேசராம் இயேசு, அவர்களைச் சீர்ப்படுத்தி உயர்த்துவார்.**

உன்னதப்பாட்டு 8:11,12 வசனங்களை வாசிக்கவும்.

இவ்வசனங்களில் இருவேறுபட்ட திராட்சத்தோட்டங்களைக் காண்கிறோம். பாகால் ஆமோனிலே சாலொமோனுக்குச் சொந்தமான தோட்டம் ஒன்று இருந்தது. மணவாட்டிக்குச் சொந்தமான தோட்டம் வேறொன்றும் இருந்தது. இவற்றைக் கீழே விவரமாகக் காண்போம்.

*"பாகால் ஆமோனிலே சாலொமோனுக்கு ஒரு திராட்சத்தோட்டம் உண்டாயிருந்தது,..."*

பொதுவாக, திராட்சத்தோட்டம் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையையும், கிறிஸ்தவ ஊழியத்தையும் குறிக்கிறது. பாகால் ஆமோனிலே சாலொமோனுக்குச் சொந்தமான திராட்சத்தோட்டம், உலகமுழுவதிலும் பரவியிருக்கும் கர்த்தருடைய ஊழியத்தைக் குறிப்பதாகும். ஆம், கர்த்தருடைய சபை உலகமுழுவதிலும் பரந்து காணப்படுகிறது. கர்த்தருடைய பிள்ளைகள் தங்களால்தான் கர்த்தருடைய ஊழியம் நடக்கிறது, தாங்கள் தான் மணவாட்டிசபை என்று, கிணற்றுத் தவளைகள் போன்று ஒருபோதும் எண்ணவோ, கூறவோ கூடாது.

*'பாகால் ஆமோன்'* என்னும் சொற்களுக்கு, *"திரள்கூட்டத்தின் எஜமான் அல்லது கர்த்தர்"* என்பது பொருளாகும். சாலொமோன், இயேசு கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாயிருக்கிறார் என்பதை முன்னரே கண்டிருக்கிறோம். இயேசு கிறிஸ்து திரள்கூட்டமான மக்களுக்கு ஆண்டவராகக் காணப்படுகிறார்.

*"இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கு... இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் ... அறிக்கைபண்ணும்படிக்கும்..."* (பிலிப். 2:10,11).

ஆம், இயேசுவின் நாமத்... கேட்டவுடன் உலகின் எல்லாப் பாகங்க... வசிக்கும் திரள்கூட்ட மக்களின் முழங்கா... யாவும் முடங்கியே தீரும். எல்லாரது நாவு... இயேசுவே ஆண்டவர் என்று அறி... செய்தே தீரவேண்டும் என்பது இவ்வசன... தெளிவாகிறது.

*"அந்தத் தோட்டத்தைக் காவலா... வசத்திலே அதின் பலனுக்காக,... விட்...* (உன்.8:11).

திராட்சத்தோட்டத்தின் காவலா... யார்? தேவனுடைய சேவையில் ஈடு...டிருக்கும் அனைத்து மக்களும் ஊழி... ஆவர். பொதுவாக, உலகில் வாழும் செல்... தமது தோட்டங்களை வாடகைக்... குத்தகைக்கு—காவலாளர்களி... விட்டுச்செல்வது இயல்பு. அந்தக் குத்த... காரர் அதின் கனிகளைத் தங்களு... சொந்தமாக்கிக்கொள்ள உரிமைபெறுவர்.

இதுபோலவே, நாமும் கர்த்தரு... செய்யும் சேவையினால் கிடைக்கும் பல... கனிகளை இவ்வுலகில் அநுபவிக்கல... கர்த்தருக்குச் சேவை செய்யும்போது கிடை... நமது கனிகள் எவை? இயேசுவு... சொந்தமாகும் திரளான ஆத்துமாக்கள... நம்மூலம் இரட்சிக்கப்படும் மக்களை எ... நாம் இயேசுவுக்குள் மகிழ்ச்சியும் மகி... அடைவோமல்லவா?

*"எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோ... மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் ... நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறி... வரும்போது அவருடைய சந்நிதானத்... நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்"* (1 தெச. 2...

இங்குப் பவுல் அப்போஸ்தல... மகிழ்ச்சிதான் என்னே! என்னே! அப்போஸ்...

...ம் அதிகாரத்தை வாசிப்பீர்களாயின், ...லோனிக்கே பட்டணத்தில் பவுலடியார் ...வேற்றின ஊழியத்தைக்குறித்துக் ...லாம். கர்த்தரது திராட்சத்தோட்டத்தில் முயற்சியோடு, உற்சாகமாய் இயேசுவுக்கு ...செய்ததினால் தான் பெற்ற ஆத்துமாக் ...க் குறித்துள்ள மகிழ்ச்சியை, இங்குத் ...கிறார் பவுலடியார்.

மகிழ்ச்சியின் கிரீடம் என்பது, ...வருடைய திராட்சத் தோட்டத்திலே ...மாய்ப் பணிசெய்வதால் கிடைக்கக் ...தொன்றாகும். எத்துணை ஆத்துமாக் ...இயேசுவுக்கென்று ஆதாயப்படுத்துகி ...மோ, அத்துணைக் கற்கள் நம்முடைய ...த்தில் பதிக்கப்படும்.

இயேசு கிறிஸ்துவின் திராட்சத் ...த்தில் பணிபுரியும் காவலாளர்களாகிய ...கள் மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் ...எவ்விதம் சேவைசெய்ய வேண்டும்? ...கீழ்க்காணும் வசனங்கள் போதிக்கின்றன.

"உங்களிடத்திலுள்ள தேவனுடைய ...தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் ...மனப்பூர்வமாயும், அவலட்சணமான ...யத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், ...தத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக ...மந்தைக்கு மாதிரிகளாகவும், ...காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் ...தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும் ...மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் ...வீர்கள்" (1 பேதுரு 5:2,3,4).

தோட்டத்தின் காவலாளர்களாகிய ...யரே! உங்களுக்கு மகிமையுள்ள வாடாத ...ம் வேண்டுமா? மேற்காணும் வசனத்தின் ...தேவனுடைய திராட்சப்பண்ணையிலே ...புரிவீர்களாக. இன்று, அநேகருடைய ...யத்தில் கனிகள் காணப்படுகிறதில்லை. ...மாக்கள் பெருகி வளருகிறதில்லை. இது ...ம் வருந்தத்தக்கது.

அன்பான ஊழியரே! கனிகளாகிய பலனைப் பெற்றுக்கொள்ள, இயேசுவுக்கு முழுமையாய் உங்களை அர்ப்பணித்து, ஊழியஞ் செய்யுங்கள். உங்களுக்கு ஆவியானவர் கொடுத்துள்ள தோட்டத்தை (ஊழியத்தை) கொத்தி, பண்படுத்தி, எருவிட்டு, தண்ணீர் பாய்ச்சி வளர்க்க வேண்டியது உங்களது கடமை என்பதை நினைவிற்கொண்டு செயல்படுங்கள்.

"ஒவ்வொருவன் ஆயிரம் வெள்ளிக் காசு கொண்டுவரும்படி (காவலாளர் வசத்தில்) விட்டார்" (உன். 8:11).

சாலொமோனுடைய தோட்டத்தில் காணும் கனிகள் அந்தக் காவலருக்குச் சொந்தமாயினும், அவ்வரசனுக்குச் செலுத்த வேண்டிய வாடகைத் தொகையைக் காவலர் செலுத்தியே தீரவேண்டும். அதாவது, தேவனுடைய திராட்சப்பண்ணையில் பணிபுரியும் ஊழியர் எழுத்தின்படியாக ஆயிரம் வெள்ளிக்காசைத் தேவனுக்குச் செலுத்தும்படி, தேவன் கேட்கிறதில்லை. தேவனுடைய பிள்ளைகள் முழு இருதயத்தோடும், நேர்மையோடும், உண்மையோடும், உத்தமத்தோடும் உழைக்கவேண்டும் என்பதைத்தான் தேவன் விரும்புகிறார். அதாவது, தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிற **தரத்திற்கு** நம்முடைய ஊழியம் அமைந்திருக்கவேண்டும். கடன்பட்டவர்கள், கடன்கொடுத்தவர்களிடம் செலுத்தித்தீர்க்க வேண்டிய முழுத்தொகையை இது குறிக்கின்றது.

ஆபிரகாம் தன் மனைவியான சாராளைத் தன்னுடைய சகோதரி என்று அபிமெலேக்கு இராஜாவிடம் கூறினமையால், அவன் அவளைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள விரும்பி, அவளைத் தன்னிடம் சேர்த்துக்கொண்டான். தேவன் அபிமெலேக்கின் சொப்பனத்தில் தோன்றி, அவனை எச்சரித்ததினால், அவன் அக்கொடிய பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டான். **தன் தவறான எண்ணத்திற்கீடாக அவன் ஆயிரம் வெள்ளிக்காசை அவளுக்குக் கொடுத்து,**

அவளைக் கடிந்துகொண்டான் (ஆதி.20:16). பழைய ஏற்பாட்டுக் காலத்து நியதி இது.

''அந்நாளிலே, ஆயிரம் வெள்ளிக்காசு பெறும் ஆயிரம் திராட்சச்செடியிருந்த நிலமெல்லாம் முட்செடியும் நெரிஞ்சிலுமாகும்'' (ஏசாயா 7:23).

இங்கும் ஆயிரம் வெள்ளிக்காசுகள் என்பது எழுத்தின்படியான காசுகளைக் குறிப்பதன்று. இது மனிதன் கொடுத்துத் தீர்க்கும்படியான வாடகைத் தொகை... குறிக்கின்றது.

கர்த்தர் நம்மிடம் எதிர்பா... எழுத்தின்படியான ஆயிரம் வெள்... அல்ல. ஏதோ, கடனே என்று அ... ஊழியஞ் செய்யாமல், அவரது திர... தோட்டத்தில் முழுமனதோடு உழைப்ப... விரும்பி, எதிர்பார்க்கிறார். ஆத்தும அறு... குறித்த கணக்கை நாம்அவருக்கு ஒப்பு... தீரவேண்டும்.

(தொ...

பெண்கள்பகுதி

# கிழியுண்ட திரை

குல்ஷான் எஸ்...

என் அக்காளின் சவம் கிடத்தப் பட்டிருந்த அறைக்குள் நான் சென்றேன். அனீசின் முகமெல்லாம் வெளிறிப்போய் உதடுகளெல்லாம் நீலமாக மாறியிருந்தன. அனீசின் கணவர் துயரத்தால் அழுதார். அந்த அறை துக்கம் கொண்டாட வந்த உறவினர் களாலும், அயலகத்தாராலும் நிரம்பியிருந்தது.

நான் அனீசின் படுக்கையண்டை முழங்காற்படியிட்டு அழுதேன். என் உள்ளத்தின் ஆழத்தில், "இயேசுவே, அவள் உயிரோடு இருப்பாள் என்றல்லவா நீர் சொன்னீர். நான் இப்பொழுது என்ன செய்யட்டும்? அவள் மரித்து விட்டாளே," என்று ஆண்டவரிடம் பேசினேன்.

நான் தொடர்ந்து ஜெபித்தேன்: "இயேசுவே, நீரே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறீர். தயவுசெய்து இந்த அற்புதத்தை நீர் செய்து அவளை உயிரோடு எழுப்பும்."

நான் இவ்வண்ணமாக இடைவிடாமல் ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். ஒரு கட்டம் வந்தபோது இயேசு மிகுந்த வல்லமையோடு என்னிடம் இப்படிப் பேசுவதாக உணர்ந்தேன்:

"அவள் மரிக்கவில்லை. நான் அ... உயிரோடு காத்துக்கொள்ளுவேன்."

மேலும் தொடர்ந்து ஜெபித்தேன்...

"ஆண்டவரே, நான் அவளிட... உம்மைக்குறித்துக் கொஞ்சம் பேசும்ப... கொஞ்சம் ஜீவனை அவளுக்குள் அனுப்...

எனது ஜெபத்தின் உச்சக் கட்ட... நான் இயேசுவின் குரலைத் தெளி... கேட்டேன்: "அவள் மரிக்கவில்லை, அ... உயிரோடு இருக்கிறாள். நான் அவ... ஆயுளைக் கூட்டிக்கொடுத்திருக்கிறேன்."

இதனைக் கேட்ட மாத்திரத்தில் ... எழுந்து அவ்வறையில் இருந்த யாவ... பார்த்து, "நீங்கள் ஏன் அழுதுகொண்டி... றீர்கள்? அவள் மரிக்கவில்லை. அ... உயிரோடு இருக்கிறாள்," என்று கூறி... அவ்வறையில் எங்கும் திகைப்பும் கலக்... உண்டாயிற்று.

"இவள் பைத்தியக்காரி. அ... அறைக்குள் இவளைத் தள்ளிப் பூட்டு... என்று யாரோ ஒருவர் இரைந்து கூறி... அவர்கள் என்னை வெளியேற்றி, கா... இருந்த அடுத்த படுக்கையறைக்குள் என்...

...னார்கள். அறையின் கதவும் வெளியே ...ப்பட்டது. நான் கைதிபோல சிக்கிக் ...ண்டேன். ஆனால், நான் தொடர்ந்து ...த்தேன்.

"ஆண்டவரே! என் அக்காளை எழுப்பும். ...ள் உயிரோடு இருக்கிறாள் என்று அவர்கள் ...ரும் நம்பும்படி செய்யும்."

சவ அடக்கத்திற்கான இறுதிச் சடங்கு ...ன மும்முரமாகச் செய்யத்துவங்கினர். ...பெட்டி ஆயத்தமாக இருந்தது. அனீசின் ...ம் குளிப்பாட்டப்பட்டு, புத்தாடை ...விக்கப்பட்டது. அவளது சடலம் மறுபடியும் ...ப்பாட்டப்படும்; ஆனால் இரவில் அல்ல.

காலை எட்டு மணிவரை நான் தனியாக ...த அறையில் பூட்டப்பட்டுக் கிடந்தேன். ...டு மணிக்குக் கதவு திறக்கப்பட்டது. என் ...காதரியின் உடலைப் பார்த்து இறுதி ...யாதை செய்யும்படியாக நான் விடுவிக்கப் ...டேன்.

ஏனைய பெண்களோடு நானும் அவள் ...டிலண்டை நின்று கொண்டிருந்தேன். ...ளல்வியின் மனைவி சடலத்தின்மீது ...ஸ்மாஸ் ஓதினாள். அதன்பின் அவளும், இதர ...ன்று பெண்களும் முன்நகர்ந்து, சடலத்தை ...றுதியாகக் குளிப்பாட்டும்படி அதைத் தூக்க ...த்தனித்தார்கள்.

திடீரென அனீஸ் தன் கையை ...சைத்தாள், கண்களைத் திறந்தாள். நிமிர்ந்து ...உட்கார்ந்து சுற்றும் முற்றும் பார்த்து, அதிசயிக்க ...ரம்பித்தாள். அதன்பின் தன் கைகளை ஆராய ...ரம்பித்தாள். "எனக்கு என்ன சம்பவித்தது?" ...ன்று கேட்டாள்.

ஜனங்கள் பயத்தால் கூச்சலிட்டனர். ...லர் பின்னாக விழுந்தனர், வேறுசிலர் ...அவ்வறையிலிருந்து தப்பிஓட முயற்சித்தனர். ...ப முடியாத கலவரம் அங்கு நிலவியது. ...னோ அனீசைக் கட்டித் தழுவிக் ...கொண்டேன். அவளும் என்னை இறுகப் ...றிக்கொண்டாள்.

பதறி ஓடிய மக்கள் யாவரும் திரும்ப வந்தனர். அதன்பின் எல்லோரும் என்னை நோக்கிப் பார்த்தனர். "நீ என்ன செய்தாய்? செத்துப்போன அவள் எப்படி எழுந்து உட்கார முடிந்தது?" என்று அவர்கள் பரபரப்புடன் கேட்டார்கள்.

நான் மகிழ்ச்சியால் நிரம்பினேன். தேவன் மகா பெரியவர் என்கிற உணர்வு என்னுள் மேலிட்டது. நான் புன்முறுவலுடன், "அவளையே கேளுங்கள்," என்று அவர்களிடம் கூறினேன்.

அனீஸ் தனது வழக்கமான அமைதியான முறையில் பேசினாள்: "என்னைப் பற்றி பயப்படாதீர்கள். நான் உயிருடன்தான் இருக்கிறேன்," வீட்டில் உண்டான கொந்தளிப்பையும், கூச்சலையும் கேட்டு, மசூதியிலிருந்து அனீசின் கணவரும், மௌல்வியும், மூசேனும் ஓடிவந்தனர்.

மௌல்வி தன் கையை அனீசின் தலையிமீது வைத்து, "பேட்டி, எனக்கு உண்மையைக் கூறு, என்ன நடந்தது? பதினான்கு மணி நேரத்திற்குமுன் நீ மரித்தாயே! நாங்கள் உன் சவ அடக்கத்துக்காக அல்லவா ஆயத்தமாகிக்கொண்டிருந்தோம்!"

அனீஸ் அடக்கமாகப் பதிலுரைத்தாள்: "நான் மரிக்கவேயில்லை." டாக்டரம்மா அங்கேதான் இருந்தார்கள். "இல்லை, நீ மெய்யாகவே மரித்துவிட்டாய். உன்னில் உயிர் இல்லவே இல்லை," என்று அவர்கள் உறுதியாகக் கூறினார்கள்.

"நான் மரிக்கவில்லை. தூங்கிக் கொண்டுதான் இருந்தேன். தூக்கத்தில் நான் ஒரு கனவு கண்டேன். அக்கனவில் நான் ஒரு ஏணியின்மேல் கால்வைக்க ஆயத்தமாக இருந்தேன். ஏணியின் உச்சியில் வெண்ணங்கி தரித்த ஒரு மனிதர் தலையில் தங்கக் கிரீடம் அணிந்தவராக இருந்தார். அவரது நெற்றியிலிருந்து ஓர் ஒளி வீசிக்கொண்டிருந்தது. எனக்கு மேலாக நீட்டப்பட்டிருந்த அவரது கையைப்

பார்த்தேன். அக்கைகளிலிருந்து ஒளி வீசிக்கொண்டிருந்தது. அவர் பேசினார்: 'நானே இயேசு கிறிஸ்து, இராஜாதி ராஜா. நான் இப்பொழுது உன்னைத் திரும்ப அனுப்பி விடுவேன். ஆனால், குறித்தகாலத்தில் உன்னை மறுபடியுமாக இவ்விடத்துக்கு அழைத்துக்கொள்ளுவேன்.' அக்கணமே நான் என் கண்களை விழித்துப் பார்த்தேன்.''

இவற்றை அனீஸ் கூறியபோது அவளது முகம் மகிழ்ச்சியின் பிரகாசத்துடன் ஜொலித்தது.

என்னுடைய குடும்பத்தினரின் மகிழ்ச்சியையும், களிப்பையும் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. எனக்குத் தருணம் கிடைத்தபோதெல்லாம், நான் சொல்வதைக் கேட்க விழைந்த ஒவ்வொருவரிடமும் அற்புதங்களைச் செய்யும் தீர்க்கதரிசியாகிய இயேசுவைப்பற்றியும், அவர் வெறும் தீர்க்கதரிசிமட்டுமல்லவென்றும் விளக்கிக் கூறினேன்.

ஆரம்பத்தில் என்னை அதிகமாக எதிர்த்து நின்ற அனீசின் கணவர் இப்பொழுது என்னைப் பார்த்து எனது ஜெபத்தினால்தான் அனீஸ் உயிர் பெற்றாள் என்று கூறினார்.

மூன்று நாட்கள் கழித்து விருந்தினர்கள் யாவரும் சென்றபின் அனீசின் கணவர் என்னைப் பார்த்து, "நீ கண்ட இந்த மகா பெரிய தீர்க்கதரிசி யார்?'' என்று கேட்டார்.

குர்ஆனில் சூரா மரியாமில் இயேசுவைப்பற்றிக் கூறும் பகுதிகள் யாவற்றையும் அவருக்குக் காண்பித்தேன். அதன் பின்பு வேதபுத்தகத்தில் யோவான் 11:43,44 பகுதியில் இயேசு எப்படி லாசருவை எழுப்பினார் என்ற சம்பவத்தையும் காண்பித்தேன். "இயேசு மரித்தோரை எழுப்புகிறார் என்பதை இப்பொழுதாவது நீங்கள் நம்புகிறீர்களா? 'லாசருவே வெளியே வா' என்று அவர் கூறியபோது அவன் வெளியே வந்தான் என்று எழுதப் பட்டிருக்கிறது அல்லவா?''

மெதுவாக அவர் பதிலளி "மரியாளின் மகனாகிய இயேசுவின் லிருந்தே இது வந்தது என்று நம்புகிறேன் மனைவிக்கு இரண்டாவது வாழ்வு கொ பட்டிருக்கிறது.'' நான் சொன்னவற்றை ஏற்றுக்கொண்டார் என்றும், மகி யடைந்தார் என்றும் காணப்பட்டது.

அனீசில்தானே மிகப்பெரிய மா நடைபெற்றது. என்னை எப்பொழு நேசித்த அக்காளாக அவள் இருந் இப்பொழுது மகிழ்ச்சியையும் சமாத தையும் கதிர்கள்போல தன்னிலிருந்து கொண்டிருந்தாள். மௌல்விக்கும் அ மனைவிக்கும் தான் கண்ட இயேசு தரிசனத்தைப்பற்றி அவள் கூறிய அவர்கள் மிகுந்த கருத்தோடும் கவனத்தே அதைக் கேட்டார்கள். ஆனால் அதன் பி அவர்கள் என்னை ஆதரிக்காததுபோலப் ப ஆரம்பித்தனர்.

நான் அனீசுடன் தனிமையாக இரு கிடைத்த குறுகிய நேரம் ஒன்றில் அ மெல்லிய குரலில் என்னிடம், "இயேசுவை பற்றி இன்னும் அதிகமாக எனக்கு சொ என்றாள். ஆகவே, நான் அவளுக்கு ஒரு சி புதிய ஏற்பாட்டுப் பிரதியைக் கொடுத்தே அவளும் தான் அதை வாசிக்கப் போவ வாக்குக் கொடுத்தாள். அவளுக்கு பு புத்தகத்தை விளக்கிச் சொல்ல யாரா தன்னுடன் இருக்க வேண்டுமென்று அ விரும்பினாள். மத்தேயு எழுதிய சுவிசேஷ லிருந்து தொடர்ந்து வாசித்தாள். இயேசுவி பிறப்பைக் குறித்தும் அவரது வம்ச வரலாற் குறித்தும் நான் விளக்கிச் சொன்னேன்.

"தயவுசெய்து எனக்காகத் தொட ஜெபித்துக்கொண்டிரு. நான் எனக்கு ஜீ கொடுத்த இயேசுவை உண்மைய பின்பற்றவும், நான் கண்டவற்றி அவருக்கு நம்பகரமாக ஜீவிக்க விரும்புகிறேன். எனக்குத் திருமண இருப்பதால் எனக்கு அதிகமான ஜெப உ தேவை'' என்று கெஞ்சினாள்.

எனது கண்களில் கண்ணீர் கிற்று. அவளது நிலைமைக்காகத் துயரம் ந்தேன்.

சூரியோதய பள்ளிக்கு நான் திரும்பிச் லவேண்டிய காலமாயிற்றென்று டேன். மெய்யாகவே நான் அங்குச்சென்று அற்புதங்களை யாரிடமாவது சொல்ல டுமென்று துடித்தேன். லாகூருக்குத் பிச் செல்லும் பஸ்ஸைப் பிடிக்கப் பட்டேன். அப்பொழுது அனீஸ் என் ய இறுகப்பற்றிப் பிசைந்தவளாக னைப் பார்த்து, "குல்ஷான், என்னுடைய உனக்கு எப்பொழுதுமே திறந்திருக்கும். நீ பொழுது வேண்டுமானாலும் என்னிடம் திரும்பிவரலாம். நம் குடும்பத்தில் மற்றவர்கள் உன்னைப் பார்க்க விரும்பாவிடினும் நான் உன்னைப் பார்க்க வாஞ்சிக்கிறேன்" என்றாள்.

குஜராத் பஸ் நிலையத்தில் இருந்து பஸ் புறப்பட்டது. நடந்த அனைத்து சம்பவங்களையும் எண்ணிப் பார்த்து மகிழ்ச்சியடைந்தேன். நான் அம்மக்களையும் அவர்கள் உலகத்தை நேசித்ததையும் கண்டபோது, அவர்கள் மத்தியில் நான் பிழைக்கமுடியாது என்பதை அறிந்துகொண்டேன். நான் இப்பொழுது மெக்காவை நோக்கிச் செல்லும் பாதையில் அல்ல. இயேசுவின்மூலமாக நேராகத் தேவனை நோக்கிப் புனித பயணம் செய்யும் ஒரு பெண்மணி. (தொடரும்)

As a youth starts in life, he should ve faith to live by. He must have a cause to ve and he should have a fellowship in ich faith can be nourished and through ich that cause can be served. Give your- f to that cause. Enter the fellowship of Church with dedication.

Mark 10:21 quotes as follows: *en Jesus beholding him loved him, and d unto him, One thing thou lackest: go way, sell whatever thou hast, and give he poor, and thou shalt have treasure aven: and come, take up the cross, and w me."*

This verse speaks about the rich ng ruler. He came to Jesus and asked Him, *hat shall I do that I may inherit eternal* This young man had a life pattern. He ted to inherit eternal life. He could not attain it. There were blocks in his life which precluded the possibility of inheriting eternal life.

Jesus said to him:

**1. Go:** Face the blocks that hinder you from attaining your life pattern. If you examine your life in the light of God's Word, you will discover many nauseating things that break the heart of God. Mark 7:21-23— These verses tell us about the evil things that come out of the heart. *"For from within, out of the heart of men, proceed evil thoughts, adulteries, fornications, murders, Thefts, covetousness, wickedness, deceit, lasciviousness, an evil eye, blasphemy, pride, foolishness: ... and defile the man."*

**2. Sell:** Get rid of the things that stand in the way of realizing your life pattern and

ruthlessly and mercilessly eradicate them. They are a stumbling block which dampens your spiritual life. Proverbs 1:10 says, *"My son, if sinners entice thee, consent thou not."* Proverbs 4:24 cites, *"Put away from thee a froward mouth, and perverse lips put far from thee."* Proverbs 4:27 quotes, *"... remove thy foot from evil."* Deuteronomy 28:14 says, *"And thou shalt not go aside from any of the words which I command thee this day, to the right hand, or to the left, to go after other gods to serve them."*

**3. Give:** Change your centre from yourself to others. Shift your focus from egoism to altruism. Psalm 41:1 says, *"Blessed is he that considereth the poor: the Lord will deliver him in time of trouble."* Jesus appreciated the widow woman who put in the offering box all that she had. Your act of giving is measured by what is left in the wallet. II Corinthians 9:7 says, *"Every man according as he purposeth in his heart, so let him give; not grudgingly, or of necessity: for God loveth a cheerful giver."* These are the three steps away from the old ways.

There are three more steps that enable you to make progress on the way.

**4. Come:** Renounce your whims and fancies and reconstruct things according to God's Word. You give up to take up. Matthew 19:27 says, *"Then answered Peter and said unto him, Behold, we have forsaken all, and followed thee; what shall we have therefore?"* Matthew 19:29 says, *"And everyone that hath forsaken houses, or brethern, or sisters, or father or mother... for my name's sake, shall receive an dredfold, and shall inherit everla life."*

**5. Take up your cross:** Takin your cross makes heavy calls on your ti energy and money. Taking up your cro mandatary; it is not optional. Let me brin your knowledge the words of Jesus. M 8:34,35 renders thus: *"And when He called the people unto Him with his ciples also, he said unto them, Whoso will come after me, let him deny him and take up his cross, and follow me."* nying oneself is the essential prelude to ing up the cross. *"For whosoever will his life shall lose it; but whosoever will his life for my sake and the gospel's, same shall save it."*

He that takes not his cross and lows after Jesus is not worthy of Him.

**6. Follow me:** We can safely fol Jesus because He is the only perfect exam Your centre is in Christ, the anointed O People may let you down; He never will. N you have an utterly dependable centr life—Christ. I Peter 2:22 says, *"Who no sin, neither was guile found in mouth:"* When He was reviled, he did revile again. He committed Himself co pletely to Him that judges righteously. T young man should emulate these vener qualities of Jesus Christ so that he can c form to the image of Jesus.

The first three steps which are a from the old life are steps into the void. next three steps lead you to victory.

# விசுவாசத்தின் பலன்

சிறுவர் பகுதி

"... நீ விசுவாசித்தால் தேவனுடைய
...யைக் காண்பாய் ..." (யோவான் 11:40).

என் பிரியமான பிள்ளைகளே! இயேசு ...துவின் நாமத்திலே உங்களை வாழ்த்து...ன. நீங்கள் இயேசு கிறிஸ்துவை ...சிக்கும்பொழுது அநேக அற்புதங்களை ...ல்ல, தேவனுடைய மகிமையையும் ...ர்கள். இக்கதை அதனைத் தெளிவு...கின்றது.

பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்த ... "அம்மா,அம்மா!" இங்கே பாருங்கள். ...கையிலிருக்கும் புத்தகத்தின் பெயர் ...வென்று தெரியுமா? இதுதான் இயேசு ...துவின் வாழ்க்கை வரலாறு அடங்கிய ...றபாடு. இன்று எங்கள் பள்ளியிலுள்ள ...ண மாணவ மாணவியருக்கும் எங்கள் ...மையாசிரியர் இதனைக் கொடுத்தார்கள். ...டுமா? '... நீ விசுவாசித்தால் தேவனுடைய ...மையைக் காண்பாய் ...' (யோவான் 11:40) ... வசனத்தைக்கூறி, மரித்து நான்கு ...களுக்குப்பின்னர் இயேசுகிறிஸ்து ...ோடு எழுப்பின லாசருவின் சம்பவத் ...குறித்து விளக்கினார்கள். அம்மா! ... அவரை விசவாசித்தால் ..." என்று ...தினாள் ஸ்நேகா.

அவள்பக்கம் திரும்பிய அவளுடைய ... அதிர்ச்சிதான் காத்திருந்தது. கோபமாக ...ருந்த தன் கணவரைக் கண்டு ...தறியாது திகைத்தார்கள். அப்பொழுது ... தந்தை, ஸ்நேகாவிடமிருந்து அந்தப் ...ஏற்பாட்டை வாங்கிக் கிழித்து தூர ... "ஏய்! இந்தப் புத்தகத்தைப் பற்றியும், ... தெய்வத்தைப் பற்றியும் ஏதும் ...டிற்குள் வரக்கூடாது; எவ்வளவு தைரியமாய் இதைச் செய்கிறீர்கள்! இன்று, சாப்பாட்டிற்குப் பணம் கொடுக்கமாட்டேன்; உன் இயேசு தருகிறாரா, பார்ப்போம்!" என்று கூறி கோபமாக வீட்டைவிட்டு வெளியேறி, தன் சொந்த ஆட்டோவில் வெகு வேகமாகச் சென்றுவிட்டார், ஆட்டோ ஓட்டுநரான ஸ்நேகாவின் தந்தை.

கிழிந்து கிடந்த புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள் ஸ்நேகா. கிறிஸ்தவப் பள்ளியில் பயின்று வந்த அவள், இயேசு அப்பாவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டாள். அவரே உண்மையான தெய்வம் என்னும் சத்தியத்தைத் தன் தாய்க்கும் புகட்டினாள்.

அந்நிய தெய்வங்களை வழிபட்டுவந்த அவள் தந்தையோ அவர்களது விசுவாசத்திற்கு முரண்பாடாய் அமைந்திருந்தார். ஆயினும், அவளுக்குள்ளிருந்த இயேசு கிறிஸ்துவை, அவரால் சிறிதும் அசைக்க முடியவில்லை. அப்பொழுது தொலைபேசியின் அழைப்பு மணிஓசையைக் கேட்டு, ஓடினார்கள் ஸ்நேகாவின் அம்மா. தொலைபேசியில் பேசும்போதே, அவர்கள் கண்கள் குளமாயின; கண்ணீர் கன்னத்தில் வழிந்தோடியது. "என்ன?" என்பதுபோலப் பார்த்தாள் ஸ்நேகா.

அப்பொழுது அவள் அம்மா, "ஸ்நேகா! கோபமாக ஆட்டோவை ஓட்டிச்சென்ற அப்பா நிலைதடுமாறி, ஒரு மரத்தில் மோதி விட்டாராம்; தலையில் பலத்தக் காயத்துடன் சுயநினைவிழந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளாராம். வா, போகலாம்" என்று சொல்லி, புறப்பட ஆயத்தமானார்கள்.

மருத்துவமனையை அடைந்த இருவரும் ICU அறையைக் கண்டுபிடித்து,

அங்குச் சென்றனர். அங்கு வந்த மருத்துவர், ''அம்மா, இப்பொழுது நீங்கள் உங்கள் கணவரைப் பார்க்க முடியாது. அவருக்குத் தலையில் பலத்தக் காயம் ஏற்பட்டிருப்பதால் சுயநினைவின்றி இருக்கிறார். நாளை காலையில்தான் அவருடைய நிலைமையை அறிந்துகொள்ள முடியும்,'' என்று சொல்லி, வேகமாக அவ்வறைக்குள் நுழைந்தார்.

அருகிலிருந்த ஒருவர் ஸ்நேகாவின் கையிலிருந்த புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தைப் பார்த்து, ''ஓ! நீ கிறிஸ்தவளா? இன்று இரவு ஜெபி; இயேசு கிறிஸ்து உன் அப்பாவைச் சுகப்படுத்துவார்'' என்றார்.

தந்தையின் நிலைமையை அறிந்த ஸ்நேகாவின் இருதயம் கலங்கினாலும், நிச்சயமாய் இயேசு அப்பா அவரைச் சுகப்படுத்துவார் என்று விசுவாசித்தவளாய், தன் தாயின் மடியில் தலைவைத்து உறங்கிவிட்டாள்.

மறுநாள் காலையில் பேச்சுக்குரல் கேட்டு, கண் விழித்தாள் அவள். ''ஸ்நேகா, அப்பா கண்விழித்துவிட்டாராம்; வா, போய்ப்பார்க்கலாம்,'' என்று உற்சாகப்படுத்தினார்கள் அவள் அம்மா.

ஸ்நேகா தன் கையிலுள்ள புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

''அப்பா! இயேசு அப்பாதான் உங்களைக் குணமாக்கியுள்ளார், தேவனுடைய மகிமையை நாங்கள் காணும்படியும் செய்தார். *'நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்'* என்று இப்புத்தகத்தில் எழுதியிருக்கிறது. ஆகவே, நீங்கள் விசுவாசித்தால், இயேசு அப்பா உங்களுக்குப் பூரண சுகம் கொடுத்து வீட்டிற்கு வரும்படியும் செய்வார்,'' என்றாள் ஸ்நேகா. அவள் தாயோ என்ன நேரிடப்போகிறதோ என்று பயத்துடன் தன் கணவரைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவரோ ஸ்நேகாவை அணைத்துக்கொண்டு, ''ஸ்நேகா! நீ சொல்வது சரிதா[ன்]. இயேசு அப்பா என் கனவில் வந்து என[்னைத்] தொட்டதால்தான் நான் சுகமானேன். அ[வ]ர்தான் மெய்யான தெய்வம் [என்று] அறிந்துகொண்டேன். இனி, நாம் எ[ல்லாரும்] இயேசு அப்பாவின் பிள்ளைகள்தான்,'' எ[ன்று] நிம்மதிப்பெருமூச்சுடன் இயேசு அப்பா[வுக்கு] நன்றி செலுத்தினாள் ஸ்நேகா.

என் அருமைப் பிள்ளை[களே], நீங்களுங்கூட இந்தச் சூழ்நிலை ம[ாறுமா] அல்லது இந்த நபர் இயேசுவை ஏ[ற்றுக்] கொள்ளுவாரா? என்று கலங்கிக்கொண்[டிருக்கி]றீர்களா? கவலைப்படாதீர்கள். ''நீ[ங்கள்] விசுவாசித்தால் தேவனுடைய மகிமை[யைக்] காண்பீர்கள்.''




## அறிவிப்பு

நமது அப்போஸ்தல கிறிஸ்[தவ] தலைமைச் சபையில் 2011, அக்டோ[பர்] முதலாம் நாளிலிருந்து 2011, நவம்பர் 9 [ஆம்] நாள் முடிய, 40 நாட்களின் உபவாச ஜெ[பம்] நடந்துவருகிறது என்பதை வாசகர்களு[க்கு] அறிவிக்கிறோம்.

# சாட்சிப்பகுதி

**குழியிலிருந்து தூக்கியெடுக்கப்பட்டேன்**

வைதீகமான பிராமணக்குடும்பத்தில் கப்பட்ட நான் மிகவும் பக்தியுள்ளவனா தேன். எல்லா இந்துக்கடவுள்களையும் அவர்களை ஒழுங்காக வழிபட்டு தேன். எனினும், நான் பொய்யான தெய்வங் வழிபடுவதை உணராதிருந்தேன்.

வெளிப்புறத்தில் நான் மகிழ்ச்சியுடன் பட்டாலும், உள்ளத்தில் அமைதியையும் தானத்தையும் பெற, ஏக்கம் என்னுள் பட்டது. உள்ளத்தில் ஒரு குற்றவுணர்வு துகொண்டேயிருந்தது. அதைத் தவிர்க்க றேன், எல்லா இந்துக் கடவுள்களிடமும் ண்டினேன்; பலனில்லை, எவ்வளவுக் மாக நான் தெய்வங்களைத் தொழுதேனோ வளவுக்கு அதிகமாகப் பாவத்தில் ஆழமாக போனேன்; அமைதியின்மை பின்னும் மாயிற்று.

ஒரு நாள் நான் கல்லூரிக்குச் றுகொண்டிருந்தபோது, என் எதிரில் வந்த வாலிபர் கூட்டம் என்னைக் கவர்ந்தது. ர்களிடம் என்னிடத்திலில்லாத ஏதோ று இருப்பதாக உணர்ந்தேன். அவர்க ல்லாரும் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதைக் டேன்.

திடீரென்று ஒரு வாலிபன் என்னிடம் து, புதிய ஏற்பாட்டுப் புத்தகம் ஒன்றைக் டுத்தான். முதலில் எனக்குக் கோபம் து. "இவனுக்கு என்னிடத்தில் என்ன லை?" என்று நினைத்தேன். ஆனால், நான் ரதியை மிகவும் கவனமாக வாசித்தபோது, இயேசு கிறிஸ்துவைப்பற்றியது றிந்தேன்.

மேலும், என்னுடைய சீர்கெட்ட நிலை யும் உணர்ந்தேன். நான் தலை வணங்கி, ராகிய இயேசுவே, என்னை மன்னியும்: னைப் பாவக்குழியிலிருந்து தூக்கியெடுத் தருளும்" என்று வேண்டினேன். பாவ உணர்வு ஏற்பட்டு, இயேசுவின் இரத்தத்தினால் உண்டாகும் பாவமன்னிப்பையும் பெற்று, இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டேன். இப்போது, சமாதானத்துடன் வாழ்ந்துவருகிறேன்.

கிறிஸ்டியன் பி.என். நிஷி,
சென்னை.

---

**ஆதரவாயிருந்த கர்த்தர்**

எனது பெயர் அருட்செல்வி. நான் முகப்பேரில் வசித்துவருகிறேன். நான் அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையில் அங்கம் வகித்துவருகிறேன். நான் துரைப் பாக்கத்தில் எனக்குச் சொந்தமாக வீடு ஒன்றைக் கட்டிவரும்போது, தளத்திற்குரிய கம்பிகளின் வேலைப்பாடுகள் நடந்துவந்தன.

அந்நேரத்தில், கர்த்தர் திடீரென 18 ஆம் சங்கீதத்தை வாசிக்கும்படி கூறினார். அதனை வாசிக்க முடியாமல் அந்நேரத்தில் பல தடைகள் ஏற்பட்டும், தடைகளை மீறி வாசிக்க, கர்த்தர் உதவிசெய்தார்.

என்னுடைய வீட்டுத் தளத்திற்கு மிக நெருக்கமாக ஒரு மின் கம்பம் இருந்தது. தளவேலை செய்பவர்கள் மிகக் கவனத்தோடு வேலை செய்தபோதிலும், அவர்கள் கட்டிவந்த கம்பி மின் கம்பத்தை இருமுறை தொட்டு விட்டதால், அவைகளினூடே மின்சாரம் பாய்ந்து, நெருப்புப்பொறி சிதறியது. 18 ஆம் சங்கீதத்தின்படி, மரணக்கட்டுகளும் துர்ச்சனப் பிரவாகமும் பயமுறுத்தியபோதும், தேவன் அங்கு வேலைசெய்த ஆறுபேருக்கும் ஆதரவா யிருந்து, அவர்களை உயிருடன் காப்பாற்றினார். எனது குடும்பத்தாருக்கும் எந்த நிந்தையும் ஏற்படாவண்ணம் பாதுகாத்தார்.

எல்லாத் துதியும் கனமும் மகிமையும் தேவனுக்கே செலுத்துகிறேன்.

மேரி அருட்செல்வி, முகப்பேர்

# சபையின் செய்திகள்

2011, அக்டோபர் திங்கள் 4 ஆம் நாள் காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையின் ஐக்கியத்திலுள்ள ஏனைய சபைப் போதகர்களும், அப்போஸ்தல தலைமைச் சபையின் ஊழியர்களும் தலைமைச் சபை வளாகத்தில் ஒன்று கூடினார்.

துதி ஆராதனைக்குப் பின்னர், தலைமைப் போதகர் எம்.கே.சாம் சுந்தரம் அவர்கள், 2 கொரிந்தியர் 4:1,2 வசனங்களை மையமாகக் கொண்டு, "ஊழியர்கள் தங்களைத் தேவனுக்கு முன்பாக உத்தமர்களென்று விளங்கச்செய்ய வேண்டும்" என்றுள்ள தலைப்பில், மூன்று குறிப்புகளைப் பேசினார். ஊழியர்கள் சிந்தையிலே, நடக்கையிலே, வார்த்தையிலே பரிசுத்தமாக விளங்க வேண்டும் என்பதை அதே வசனத்தின்மூலம் வலியுறுத்தினார்.

பின்னர், போதகர் தாமஸ்ராஜ் அவர்கள், 2 சாமுவேல் 5:1,2 வசனங்களை மையமாகக் கொண்டு, "மேய்ப்பனின் ஊழியம் எவ்வித மானது?" என்றுள்ள தலைப்பில் மூன்று குறிப்புகளைப் போதித்தார்.

மேய்ப்பர்கள் தங்களின் மந்தையை (சபையை) புல்லுள்ள இடங்களில் மேய்க்க வேண்டும் (சங்கீதம் 23:1,2), ஆவியினால் நிறைந்து, அறிவோடும், புத்தியோடும் மேய்க்கவேண்டும் (எரேமியா 3:15), தங்களின் உத்தரவாதத்தை உணர்ந்தவர்களாக ஊழியஞ் செய்யவேண்டும் (1 பேதுரு 5:2) என்று அழகுற எடுத்துரைத்தார்.

ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஜெபத்திற்குப் பின்னர், மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் இனிதே முடிந்தது.

# NEWS

**நிதி நெருக்கடிக்குத் தீர்வு காண ஐரோ…**
**நாடுகள் நடவடிக்கை எடுப்பது அவசி…**

இந்தியா, பிரேசில், தென் ஆ…
நாடுகளிடையே தென் ஆப்பிரிக்க…
பிரிட்டோரியா நகரில் உச்சி மாநாடு ந…
அதில் பங்கேற்ற பாரத பிரதமர் மன்மோக…
பேசியதாவது: "இந்தியா, பிரேசில், …
ஆப்பிரிக்கா ஆகிய மூன்று நாடுக…
வேகமாக வளரும் நாடுகள். இ…
பிரதிநிதித்துவம் உலக நிர்வாகத்தில் அ…
வேண்டும். அதற்கு ஐ.நா. பாது…
கவுன்சிலை விரிவுப்படுத்தவேண்…
அவசியம். ஐரோப்பாவில் நிலவும் …
நெருக்கடி மற்றும் பொருளாதார மந்த…
கவலை அளிக்கிறது.

சர்வதேசப் பொருளாதாரத்தின் மு…
அங்கமாக, காலங்காலமாக வி…
பணக்கார, வளர்ந்த நாடுகளில் ஏ…
பிரச்சினைகளால், இந்தியா போன்ற வ…
நாடுகளின் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படு…
வளர்ச்சியில் அமெரிக்கா, ஐரோப்பா, ஜ…
ஆகியவை இப்போது எதிர்மறை விளை…
ஏற்படுத்திவருகின்றன. அதனால், …
நாடுகளின் நிதி, பங்குச் சந்தைகளில் …
தடைபடுகிறது.

எனவே, கடன் நெருக்கடி …
பொருளாதார மந்தநிலைக்கு ஐரோ…
பணக்கார நாடுகள் விரைந்து தீர்வு …
முன்வரவேண்டும். பிரச்சினையைத் …
கூடிய சரியான தீர்வை அந்நாடுகள் வி…
எடுக்கும் என்று நம்புவோம். ச…
நிர்வாகத்தில் பற்றாக்குறையைத் தீர்க்க …
அனைத்தும் ஒன்றிணைந்து ப…
வேண்டும்." இவ்வாறு பிரதமர் பேசின…

(தினகரன் 19-10…

# God's eternal love

"God hath not promised
Skies ever blue,
Flower-strewn pathways
All our lives through;
God hath not promised
Skies without rain,
Joy without sorrow,
Peace without pain.

"But God hath promised
Strength for the day,
Rest for the labor,
Light for the way,
Grace for the trials,
Help from above,
Unfailing sympathy,
Undying love."

- Annie-Johnson Flint

Reg.Number TN/CCN/385/09-11. Licence to the post under WPP No.TN.CCN.85/09-11
Regd.Under Regis.of News paper for India No. 1295/57, Posting date 29th & 30th of every mo
Date of Publication: monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrica Channel, Egmore, Chennai - 600 008.

## ஏ.சி.ஏ. இலக்கிய ஊழியத்தின்மூலமாக இதுவரையில் வெளியிடப்பட்டுள்ள
## MP3 சி.டி.க்களின் பட்டியல்

| எண். | பெயர் | விலை |
|---|---|---|
| 1. | உன்னதப்பாட்டு (வேதபாடம்) | ₹ 150/- |
| 2. | வெளிப்படுத்தின விசேஷம் (வேத பாடம்) | ₹ 150/- |
| 3. | வாக்குத்தத்தச் செய்திகள் 2005 | ₹ 40/- |
| 4. | வாக்குத்தத்தச் செய்திகள் 2006 | ₹ 40/- |
| 5. | வாக்குத்தத்தச் செய்திகள் 2007 | ₹ 40/- |
| 6. | வாக்குத்தத்தச் செய்திகள் 2008 | ₹ 40/- |
| 7. | வாக்குத்தத்தச் செய்திகள் 2009 | ₹ 40/- |
| 8. | ஏழு ஆவிக்குரிய கதாபாத்திரங்கள் | ₹ 40/- |
| 9. | புது வருட செய்திகள் 2004-2010 | ₹ 40/- |
| 10. | ஆவிக்குரிய பாடல்களும் செய்திகளும் | ₹ 40/- |
| 11. | யாக்கோபின் ஆசீர்வாதங்கள் | ₹ 40/- |
| 12. | பரிசுத்தவான்களின் நடக்கையும், ஆசீர்வாதமும் | ₹ 40/- |
| 13. | இயேசு | ₹ 40/- |
| 14. | பக்திவிருத்திக்கான செய்திகள் | ₹ 40/- |
| 15. | மிருகங்களோடு ஒப்பிடப்பட்டுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை | ₹ 40/- |
| 16. | இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம் | ₹ 40/- |
| 17. | ஊழியர்களுக்கு (8 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை | ₹ 40/- |
| 18. | இயேசுவின் வருகையைக்குறித்த செய்திகள் | ₹ 40/- |
| 19. | கர்த்தரின் திருப்பந்தி | ₹ 40/- |
| 20. | சகோதரிகளுக்கு (2 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை | ₹ 40/- |
| 21. | வாலிபர்களுக்கு (2 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை | ₹ 40/- |
| 22. | விசுவாசிகளின் ஜெப வாழ்க்கை (2 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை | ₹ 40/- |
| 23. | கர்த்தருடைய பரிசுத்தவான்கள் (2 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை | ₹ 40/- |
| 24. | மெய்யான போஜனம் | ₹ 40/- |
| 25. | நம்பிக்கையின் ஆசீர்வாதங்கள் | ₹ 40/- |
| 26. | பரிசுத்தத்தைக்குறித்த செய்திகள் (2 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை | ₹ 40/- |
| 27. | பெந்தெகொஸ்தின் செய்திகள் | ₹ 40/- |

| எண். | பெயர் |
|---|---|
| 28. | ஆறுதலின் செய்திகள் (2 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை |
| 29. | நம்மைக்குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிக்கவேண்டும் |
| 30. | பரிசுத்தம் (வேத பாடம்) |
| 31. | ஆனந்த ஆராதனை (3 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை |
| 32. | நம்பிக்கையின் பாடல்கள் |
| 33. | கிறிஸ்தவக் குடும்பம் |
| 34. | சிலுவையைக் குறித்தச் செய்திகள் |
| 35. | Golden Classical Hits (Songs) |
| 36. | தாவீது தேவனுடைய மனிதன் |
| 37. | தேவன் தமது பிள்ளைகளுக்கு அருளும் ஆசீர்வாதங்கள் |
| 38. | அப்போஸ்தலனாகிய பவுல் |
| 39. | பரிசுத்தவான்களின் ஜெபம் |
| 40. | இயேசுவின் நற்பண்புகள் |
| 41. | வாக்குத்தத்தச் செய்திகள் 2002 |
| 42. | எஸ்தர் (வேத பாடம்) |
| 43. | இயேசுவின் பிறப்பு |
| 44. | கிறிஸ்துமசின் ஆசீர்வாதங்கள் |
| 45. | வாக்குத்தத்தச் செய்திகள் 2010 |
| 46. | நெகேமியா (வேதபாடம்) |
| 47. | வெற்றியின் செய்திகள் |
| 48. | இயேசுவின் சீஷர்களிடமிருந்து கற்றுக்கொள்ளும் பாடங்கள் |
| 49. | இயேசுவின் வார்த்தைகளினாலுண்டாகும் ஆசீர்வாதங்கள் |
| 50. | குருத்தோலை ஞாயிறு செய்திகள் |
| 51. | புனித வெள்ளி செய்திகள் |
| 52. | உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் செய்திகள் |
| | (இம்மூன்று சி.டி.க்களின் தொகுப்பு ₹ 10 |
| 53. | தேவ பெலன் |
| 54. | புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் |
| 55. | ஆசீர்வதிக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கை |
| 56. | கர்த்தர் உங்கள் கைகளின் கிரியைகளை ஆசீர்வதிப்பார் |

வேண்டுவோர் விரும்பும் சி.டி.க்களை எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி.

24 Hrs. Prayer Line
26625815

**Herald of Deliverance**
*Edited and published by Pastor.M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry*
*111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.*
*Phone: 26622775 Website: www.acalivechurch.org*
*Administrative office: ACA Literature Ministry, Post Box No:3504, Chennai -600007.*
*Phone: 26622021 e-mail: acalm@acalivechurch.org*
*Printed by Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street, Vadapalani, Chennai -600 026. Phone: 24726885/Cell:9841429079*